# அற்புத வரவணிக்கத்தின்




# எங்கள் நாயகி

அற்புத வரவணிக்க வியாபக நிலையம்,
பாத்திமா கோயில், கொழும்பு-10.

220

# அற்புத வரவணிக்கத்தின் எங்கள் நாயகி

அற்புத வரவணிக்கத்தால் அடைந்துகொண்டதாக
ஆரோபிக்கப்படும் அனுக்கிரகங்கள்

" மரியாயின் வணக்கமாத நாளாந்த பக்திமுயற்சிகள் "
எனும் நூலிலிருந்து தொகுக்கப்பட்டது.

கொழும்பு—10

பாத்திமா கோவில்
அற்புத வரவணிக்க வியாபகநிலையத்தின்
ஆதரவில் பிரசுரஞ்செய்யப்பட்டது.

8–வது ஊர்பான் பாப்பானவர் விதித்த கட்டளைகளுக்கு இணங்க, இச்சிறிய நூலிலே "அற்புதங்கள்" என்ற சொல்லும், இதுபோன்ற வேறுசொற்களும் முற்றும் சரித்திரசம்பந்தப்பட்ட கருத்துடையன. அவற்றிலே கூறப்பட்டுள்ள உண்மைகளைத் திருச்சபையின் தீர்ப்புக்கு விட்டு விடுகிறோம்.

*Imprimatur* :

H. LE COUTOUR, O. M. I.,
Vicar-General.

Jaffna,
20-4-64.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | அதிசய மனமாற்றம் ... ... | 1 |
| 2. | தீயிலிருந்து காப்பாற்றப்படுதல் ... | 2 |
| 3. | இரட்டைப் பிள்ளைகள் ஆச்சரியமாகச் சொஸ்தமாக்கப்படுதல் | 3 |
| 4. | அற்புதவரவணிக்கம் அஞ்ஞானப் பெண்பிள்ளையை பரகதிக்கு வழிநடத்துகிறது | 4 |
| 5. | உத்தியோகம் பெறுதல் ... ... | 6 |
| 6. | உயிரைக் காப்பாற்றிய வரவணிக்கம் | 7 |
| 7. | மரணத்தின் வாயினின்று காப்பாற்றப்பட்டாள் | 8 |
| 8. | தேவதாயார் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றியது | 10 |
| 9. | வியாதிக்காரரின் ஆரோக்கியமே ... | 11 |
| 10. | பிறிமேசன் சபைத்தலைவரின் மனந்திரும்புதல் | 12 |
| 11. | இரற்றிஸ்போன் அல்போன்ஸ் என்பவரின் மனந்திரும்புதல் ... ... | 13 |
| 12. | மரண ஆபத்தில்நின்று காப்பாற்றப்பட்டவன் | 17 |
| 13. | "விடியற்காலத்தின் நட்சத்திரமே" | 18 |
| 14. | அற்புத வரவணிக்கமே என்னைக் காப்பாற்றியது | 19 |
| 15. | கைதி ஒருவன் புதுமையாகக் குணமடைந்தது | 20 |
| 16. | விபத்தினின்று உயிர்தப்பியது ... ... | 22 |
| 17. | நவநாளின் மூன்றாம்நாள் .. ... | 22 |
| 18. | அற்புத வரவணிக்கமும் அகோர புயலும் | 23 |
| 19. | சிறுமி தந்தையை மனந்திருப்புகிறாள் ... | 24 |
| 20. | போர்க்களத்தில் குண்டின் கேடயம் | 26 |
| 21. | பிள்ளைப்பாக்கியம் பெற்றேன் .. ... | 27 |
| 22. | பிசாசு துரத்தப்பட்டது ... ... | 28 |
| 23. | காணாமல்போனதைக் கண்டடைந்தது ... | 29 |
| 24. | இரும்புக் கழுத்தன் ... | 30 |
| 25. | அதிசயமான ஆரோக்கியம் ... | 31 |
| 26. | அடைக்கலம் நம்பிக்கையின் பலன் ... | 32 |
| 27. | அதிசய மனந்திரும்புதல் ... ... | 33 |
| 28. | இது புதுமையல்லவா? ... ... | 35 |
| 29. | மகமதிய மந்திரி காப்பாற்றப்பட்டார் ... | 36 |
| 30. | அற்புத வரவணிக்கமும் குத்துவாளும் ... | 36 |

**கவனிப்பு :** அற்புத வரவணிக்கத்தின்மூலம் சகாயங்கள் அடைந்துகொண்டவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரிக்குத் தெரிவிக்கவும்.

அற்புதவரவணிக்க வியாபகநிலையம்,
பாத்திமா ஆலயம்,
கொழும்பு, 10.

# அதிசய மனமாற்றம்

ஒரு பிரபு தனது விசுவாசத்தைத் துரதிர்ஷ்டவசமாக இழந்தபின் பரீஸ் நகரில் கடும் நோய்வாய்ப்பட்டிருந்தார். மரணத்தருவாயிலிருந்தபோதிலும் அவர் தன்பழைய பாவச் சீவியத்தைப்பற்றி மனஸ்தாபப்படும்படி செய்யப்பட்ட முயற்சிகள் யாவும் பயனற்றனவாயின.

பரீஸ் அதிமேற்றிராணியார்தானே தம்மாலியன்றளவு முயற்சித்தார். அற்புத வரவணிக்கத்தைக் கையில் ஏந்திய வண்ணமாய் நோயாளியின் இல்லத்துட் பிரவேசித்தார். ஆனால், அங்கு பிசாசு காவல்புரிந்துகொண்டிருந்தது. அந்த நிர்ப்பாக்கியமான பிரபு அதிமேற்றிராணியார் தனது வீட்டுக்குவர அனுமதிதர மறுத்ததுமன்றி, தன் அருகில் வரவும் சந்தர்ப்பம் கொடுக்கவில்லை. என்றாலும், அதிமேற்றிராணியாரின் இருதயத்தில் திடமான நம்பிக்கை தோன்றியது. மகாவல்லமையுள்ள கன்னிகையின்உதவியைக் கெஞ்சிமன்றாடினார். அவர் அவ்வீட்டிலிருந்து வெளியேறித் தம் வாசஸ்தலத்துக்கு வீதிவழியே நடந்துசென்றார். அத்தருணத்தில் ஒருவன் விரைவாக ஓடிவந்து: "ஆண்டவரே, ஆண்டவரே, தயவுசெய்து திரும்பிவாரும்" என்று ஓலமிட்டான். என்ன சம்பவம் என்று அதிமேற்றிராணியார் வினவிய பொழுது, "அந்தியவேளையில் இருக்கும் எங்கள் அருமையான நண்பர் தங்களைக்காண விரும்புகிறார்" என்றான். மீண்டும் அதிமேற்றிராணியார் அவ்வீட்டுக்கு விரைவாய்ச் சென்றார். செல்லும்பொழுது நரகசர்ப்பத்தின் தலையை நசுக்கிய மாசில்லாமல்உற்பவித்த மரிஅன்னையை வேண்டிக்கொண்டே சென்றார். தேவஇரக்கத்தின்நேரம் கிட்டியது. மன்னிப்பின் வரப்பிரசாதம் மனஸ்தாபப்படும் பாவியின் மேல் சொரிந்து வழிந்தது. சற்றுநேரத்தில் அவன் தேவனின் சமாதானத்தில் உயிர் நீத்தான்.

# தீயிலிருந்து காப்பாற்றப்படுதல்

பின்வரும் சம்பவம் இந்த அர்ச்சியசிஷ்டவளுடைய சீவியகாலத்தில் 1863-ம் ஆண்டு நடைபெற்றது.

அவள் நாற்பத்தாறுவருடகாலமாகத் தன்னுடைய கன்னிகாசீவியத்தை நடத்திய பரீஸ்நகர மடத்திற்கு அருகாமையில் இது நடந்தது.

நிறக்காகிதங்கள் உற்பத்திசெய்கின்ற தொழிற்சாலையொன்றிலே ஒருநாள் தீப்பிடித்துக்கொண்டது. அத்தொழிற்சாலைக்கும் மடத்திற்கும் இடையே ஒருபெரும் சுவர்தான் உண்டு. ஒருசிலநிமிடங்களில் தீ முளாசி எரியத்தொடங்கியது. முழுக்கட்டிடமும் தீமயமாய்க்காணப்பட்டது. மக்கள் இதைக்கண்டு திகிலடைந்து, கன்னியாஸ்திரிமார் எல்லோரும் தீக்கு இரையாகப்போகிருர்களென நினைந்து, "ஐயோ சிஸ்றர்மார்! சிஸ்றர்மாரைக் காப்பாற்றுங்கள்" என அலறினர்கள்.

உண்மையிலேயே, சிற்ருலயத்தின் சுவர்களில் தீ பரவிக்கொண்டிருந்தது. கன்னியாஸ்திரிமார் பாதுகாக்க முடிந்தவைகளைச் சேகரிக்கத் தொடங்கினர்.

அந்நேரத்தில் அம்மடத்திலிருந்த ஒரு கன்னியாஸ்திரி மட்டுந்தான் அங்கு இருக்கவில்லை. அவள்தான் கத்தரீன் கன்னியாஸ்திரி. அம்மடத்திற்குப் பின்வளவிலுள்ள வயோதிபர்சாலையொன்றிலிருந்து கரத்தினிற் செபமாலை ஏந்தியவண்ணமாகவும், கழுத்தில் அற்புதமாதா வரவணிக்கத்தை அணிந்தவளாகவும், அமைதியாகவும் வந்துகொண்டிருந்தாள் கத்தரீன். தீபற்றியதைக்கண்டும் சற்றுமே ஆச்சரியப்படாது சாந்தமும், அமைதியுமான வெளித் தோற்றத்துடன் அவள் அங்கு காணப்பட்டாள்.

முன்னொருபோதும் இல்லாதமுறையில் அதிகாரத்துடனும், உரத்த சப்தத்துடனும் திடீரென அவள் கூறியதாவது: "பயப்படாதிருங்கள்! இடத்தைவிட்டு அடிபெயராதீர்கள். மடத்திற்கு ஒருதீங்கும் நேரிடாது. பரிசுத்தகன்னி மரியம்மாள் உங்களைப் பாதுகாத்தருளுகிருள்" என்ருள்.

அவளுடைய நிம்மதியான முகத்தோற்றத்தைக்கண்டு சில கன்னியாஸ்திரிமார் அவளைப்பார்த்து மலைத்து நின்றனர். என்றாலும், அவளுடைய சொற்களுக்குச் செவி சாய்க்காது அவர்கள் திரும்பவும் பொருள்களை அப்புறப் படுத்துவதில் ஈடுபட்டுக்கொண்டு இருந்தபோது சடுதியாகக் காற்றுத் திசைமாறியது. அக்கினிச்சுவாலையும் அதற்கேற் பத் திசைமாறியது. தீ அணைந்தது. மடம் பாதுகாக்கப் பட்டது.

இச்சம்பவம் சுவிசேஷத்தில் யேசுநாதர் புயலை அடக்கிய காட்சியை நினைவூட்டுகின்றதல்லவா? அப்பொழுது யேசுநாதர் அப்போஸ்தலர்களை நோக்கி: "நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள். இன்னமும் உங்களுக்கு விசுவாசம் இல்லையோ?" என்றார். உடனே அவர் எழுந்து காற்றையும் அதட்டி, கடலை நோக்கி: "நீ சப்திக்காதே, இரையாதே" என்றார். உடனே காற்றுஒழிந்து மிகுந்த அமரிக்கை உண்டாயிற்று (மாற்கு IV : 40).

---

## இரட்டைப் பிள்ளைகள்

### ஆச்சரியமாகச் சொஸ்தமாக்கப்படுதல்

பின்வரும் சம்பவத்தைப் பங்கு விசாரணைக்குரவர் ஒருவர் விபரித்துச் சொல்லுகிறார்;

பேறுகாலத்திற்கு முன்னதாக ஒரு தாயானவள் ஆண், பெண் குழந்தைகளாகிய இரட்டைப் பிள்ளைகளைப் பெற்றெடுத்தாள். அவர்களைப்பெற்ற சிலமாதங்களின்பின் பெண் குழந்தை குணமாகினதின் நிமித்தம் நன்றிசெலுத்தும்படி தாயானவள் தேவதாயின் பீடத்துக்குமுன் பிள்ளைகளைக் கொண்டுசென்று அவளுக்கு அவர்களை ஒப்புக்கொடுத்தாள்.

அக்குழந்தைகளைப் பராமரித்துவந்த மருத்துவ அம்மா பின்வருமாறு விபரித்துச் சொல்லுகிறாள்: "ஆண்குழந்தைக்குச் சுகம் குற்றமில்லை. பெண்குழந்தை சுவாசிக்கக் கஷ்டப் பட்டது. இப்பிள்ளையின் ஓயாத அனுங்குதலும், அதன்

தோலின் கனற்றும், வெளிறின உதடுகளும் அது வெகு சீக்கரத்தில் இறந்துபோகும் என்பதற்கான அறிகுறிகளாய் இருந்தன. ஞானஸ்நானம் கொடுப்பிப்பதற்குக் கட்டளைக்குருவானவர் உடனே அழைக்கப்பட்டார். சில மணித்தியாலங்களுக்குள்ளே குழந்தை இறந்துபோகும் என்று எண்ணவேண்டியிருந்தது. ஞானஸ்நானம்கொடுத்தபின் சுவாமியார் மாதாவின் புதுமை வரவணிக்கத்தை அவ்விரு குழந்தைகள் மேலும் அணிந்தார். நடுச்சாமத்தில் பெண்குழந்தையின் அனுங்குதல் நின்றுவிட்டது. ஆனால், விக்கலும் இருமலும் அதற்குக் கடுமையாய் இருந்தபடியால் அதுஉடனுக்குடனே இறந்துபோகும் என எல்லோரும் நம்பினார்கள். ஆனால், உண்மையில் நடந்தது என்னவெனில், எல்லோரும் ஆச்சரியப்படத்தக்க விதமாய்க் குழந்தை சுணமடைந்தது. மூன்று மாதங்களின் பின்பு அக்குழந்தை பூரண சௌக்கியம் அடைந்ததுஎனக் கட்டளைக்குரவர் சாட்சியமளித்தார். இந்தப்பிள்ளைகள் தாங்கள் அணிந்திருந்த மாதாவின் புதுமை வரவணிக்கம் தங்களைவிட்டு அகன்றுபோகாவண்ணம் பாதுகாத்து வந்தனர்."

---

## அற்புத வரவணிக்கம் அஞ்ஞானப் பெண்பிள்ளையைப் பரகதிக்கு வழிநடத்துகிறது

நத்தால் திருநாளுக்கு முன்னர் பரீஸ்நகருக்கு அருகாமையில் இருபத்திரண்டு வயதுள்ள "வயலற்" என்ற பெயர்கொண்ட இளம் பெண்ணொருத்தி சீவமோசமான வியாதியாயிருந்தாள். நாலுவருடகாலமாகப் பற்பல வைத்தியசாலைகளிற் சிகிச்சைசெய்யப்பட்டுக் கடைசியாய்த் தன் இல்லத்தில் சாகும்தருவாயில் இருந்தாள். அவள் ஞானஸ்நானம் பெற்றிருக்கவில்லை. சத்தியவேதத்தைப் பழித்து, நையாண்டிபண்ணுகிறவர்களே அக்கம்பக்கத்தில் சீவித்து வந்தார்கள். தேவனைப்பற்றி எவரும் அவளோடு கதைத்தது கிடையாது. சிலவேளை தேவதூஷணத்தைத்தான் அவள் கேட்டிருப்பாள்.

பணநெருக்கடியின் காரணமாக அவள்தகப்பனுர் தரும சபைக் கன்னியாஸ்திரிமாரில் ஒருவரை அவளுக்கு ஊசி போடும்படியாக வீட்டிற்குத் தினமும் வரும்படிகேட்டிருந்தார்.

அக்கன்னியாஸ்திரி நோயாளியை அன்பாய் ஆதரித்து, ஆற்றித்தேற்றி அவள் காதினுள் பின்வருமாறு சொல்லு வாள்: "என் அன்பான வயலற்! உனக்காக மன்ருடப் போகிறேன்". அவளுக்கோ ஆருக்காக, எதற்காகவென்பது விளங்கவில்லை. அன்று பிற்பகல் அவள் மூச்சுத்திணறிக் கொண்டு இருந்தாள். மறுநாள் கன்னியாஸ்திரி அவளைப் பார்க்க வந்தபொழுது, "அன்பான வயலற்! நீ ஞானஸ் நானம்பெறச் சம்மதிப்பாயாகில் சகல நன்மைச் சுரூபியாகிய தேவனைக் கண்ணுரக் காண்பாய்" என்ருள். "நீ என் றென்றைக்கும் நித்திய பேரின்பபாக்கியத்தை அனுபவிப் பாய்" எனத் தெரிவித்தாள். அதற்கு "நான் ஒருபோதும் ஞானஸ்நானம் பெறமாட்டேன்" என நோயாளி மறுத்தாள். "அப்படியாகில் உருக்கமாய் உன்னைநேசிக்கும் உன் மாதா வாகிய தேவதாயாரின் உருவத்தை ஏற்றுக்கொள்; இடை யிடையே அதை முத்திசெய்; உன் துன்பத்தைப் பொறு மையாய்ச் சகிப்பாய்; சகிக்க உனக்கு அது உதவிசெய்யும்" என்ருள் கன்னியாஸ்திரி. "அம்மா, அதை ஏற்றுக்கொள் வேன்; ஆனல், ஞானஸ்நானம்பெற நான் ஒருபோதும் சம் மதியேன்" என்ருள்நோயாளி. வரவணிக்கத்தைக் கொடுத்து விட்டுக் கன்னியாஸ்திரி மடத்திற்குத் திரும்பினுள். அன்று சாயந்தரம்முழுவதும் அந்தநோயாளி வரவணிக்கத்தைமுத்தி செய்தவண்ணமாய் இருந்தாள். மறுநாட்காலை கன்னியாஸ் திரி ஊசிபோடச் சென்றபொழுது, "தயவுசெய்து சிஸ்றர் கெதியாக வாரும்; உங்களைக் காத்துநிற்கிறேன்; சீக்கிரமாய் எனக்கு ஞானஸ்நானம்தாரும்; இரவுமுழுவதும் தேவதாயார் ஞானஸ்நானத்தைப்பற்றி என்னுடன் பேசியருளினுர்" என் ருள். நோய்சற்றுத் தணிவாயிருந்தபடியால் சத்தியவேதத் தின் முக்கியமான விசுவாசசத்தியங்களை நன்கு கற்றுத் தெரிந்தபின் நத்தால் திருநாளின் முந்தியதினத்தில் ஞான ஸ்நானம்பெற்ருள். அத்தேவதிரவிய அனுமானத்தைப் பெற்றபின்னர் கன்னியாஸ்திரி நோயாளிக்குப் பின்வரு

மாறு கூறினாள் : "வயலற்! பரகதியைக் கொள்ளை கொண்டவளே, உன் அந்தியகாலம் நெருங்கியது" என்றாள். என்ன அதிசயம்! மூவிராசாக்கள் திருநாளில் வயலற் மரணத் திரையில் மறைந்து மோட்சபேரின்பத்தை அனுபவிக்கச் சென்றாள்.

---

## உத்தியோகம் பெறுதல்

ஒரு ருஷியப் பெண்மணி தன் கணவனின் பரிதாபகரமான மரணத்தின் பின்னர் தனக்குள்ள யாவற்றையும் இழந்து பற்றுக்கோடற்ற பூங்கொடிபோலத் தயங்கி நிம்மதியின்றிப் பரீஸ்நகரில் அடைக்கலம் தேடினாள்.

சங்கீதம், சித்திரம், ஓவியம் முதலாம் கலைகளைக் கற்க அறிந்தாளேயொழிய வேறெந்தத் தொழிலையும் இவள் பயின்றதில்லை. தன் ஜீவனத்திற்கு இவள் வேலைதேட வேண்டியிருந்தது. உதவிபுரிவார் ஒருவரும் இல்லை. வேலை கிடையாமல் பலநாட்களாய் அலைந்துதிரிந்து ஆறுதலற்றவளாய் நிர்ப்பந்தமனுபவித்தாள். கடைசியாய் ஒருவர் கூறிய நல்ல ஆலோசனைப்படி நடக்க மனங்கொண்டாள். அதாவது : கத்தரீன் லபுவோரேக்குத் தேவதாயார் தரிசனம் அளித்த றா த பாக் எனுமிடத்துச் சிற்றாலயத்தில் புதுமை வரவணிக்கத்தின் நாயகி சுரூபத்தின் பாதத்தின்கீழே ஒரு சிறுதுண்டுப் பத்திரத்தில் விண்ணப்பம் எழுதி வைக்கவேண்டும் என்பதே.

கோவிலண்டை சென்றதும் அங்கே ஒருபெருங் கூட்டம் குழுமிநிற்பதை இவள் கண்ணுற்றாள். அக்கோவிலில் இருந்த ஒரு கதிரைமீது துண்டுப்பத்திரங்கள் குவிந்திருந்தன. தனது விண்ணப்பத்தையும் மற்ற விண்ணப்பங்களோடு ஒன்றாக வைக்கும்படி ஏதோ ஒருசக்தி அவளைத் தூண்டினது. கத்தரீன் லபுவோரேயுடன் தேவதாயார் சம்பாஷித்தபோது அவள் வீற்றிருந்தகதிரை அங்கு கோவிலில் இருந்தது. முழந்தாட்படியிட்டுத் தன் விண்ணப்பப் பத்திரத்தை அங்கு குவிந்திருந்த மற்ற விண்ணப்பப் பத்திரங்களோடு

வைத்தாள். அப்போது இவளுடைய களைப்பும், அங்கலாய்ப்பும் நீங்கி ஆறுதலுண்டானது. கோவிலைவிட்டு வெளியேறினாள்.

சிலநாட்கள் கழிந்ததும் ஒருதுரைச்சாணி தான்நடத்தும் ஓவியக் கலாநிலையத்திற்கு இந்த ருஷியப் பெண்மணியை வேலைக்கு வரும்படி செய்தியனுப்பினாள். இவளை அத்துரைச்சாணி அன்பு ஆதரவுடன் வரவேற்றுச் சித்திரப்பணியில் ஈடுபடச்செய்தாள். இவள் தனது ஆன்மாவையும் இரட்சிப்பதற்கு இது காலாயிருந்தது.

ஒரு வெண் துணியால் மூடப்பட்ட பொருள்கள் நிரம்பிய பெரிய தொழிற்சாலையிலுள்ள ஒரு மேசையண்டைக்கு இவள் அழைத்துச் செல்லப்பட்டாள். அம்மேசை மீது இவள் சித்திரிக்கவேண்டிய பொருள்கள் இருந்தன. நூதபாக்கிலுள்ள புதுமை வரவணிக்க நாயகியின் சிறு சுரூபங்கள் அம்மேசைமீது இருந்தன. நன்றியறிதல்நிறைந்த இருதயத்துடன் எவருமே இவளைப்போலச் சுரூபங்கள் சித்திரிக்கமாட்டார்கள்.

தேவதாயார் தனக்குச்செய்த இப்பேருபகாரத்துக்காக அத்தாயாரைச் சகலரும் அறியும்படிசெய்யத் தன்னாலான பிரயாசை எடுப்பதென இவள் வாக்களித்தாள்.

---

## உயிரைக் காப்பாற்றிய வரவணிக்கம்

1923-ம் ஆண்டு மாசிமாதம் 2-ம் திகதி மத்திய அமெரிக்காவிலுள்ள "சென் யோசெப்" எனுமிடத்தில் பின்வருஞ் சம்பவம் நடைபெற்றதைப் பிணியாளரைப் பராமரிக்கும் கன்னியாஸ்திரி தான் கண்ணாரக்கண்டதாகச் சொல்லுகிறாள்.

முதலாவது உலகமகாயுத்தம் நடந்துமுடிந்த சில நாட்களின் பின்னர் "எட்கார் கெவ்பெர்" என்ற பெயர்கொண்ட ஒரு துரைமகன் கடன்காரனானான். கவலை மேற்பட்டவனாய்ப் புத்திதடுமாறிக் குண்டுதாணித்த கைத்துப்பாக்கியைக் கையிலெடுத்துத் தன் இருதயத்துக்குநேரே வெடிதீர்ந்தான். அவன் குடும்பத்தாரும், இப்பயங்கரமான சம்பவத்தைக் கண்டவர்களும் இறந்துபோவானேஎன்று அங்கலாய்ப்புடன் அவனை வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றார்கள்.

பிரசித்திபெற்ற "மொறனோ, சோட்டோ" எனும் இரு சத்திர வைத்தியர்கள் வேண்டிய சிகிச்சைசெய்தார்கள். நோயாளியின் சுகநிலைமை படுமோசமாக இருக்கவில்லை, அவன் பிழைப்பான் என்பதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. சுடப்பட்ட குண்டு அவன் தேகத்தைத் தாக்கியபோதிலும் இருதயத்தை ஊடுருவிப்பாயவில்லை. ஆச்சரியத்துக்குரியவிதமாக நோயாளி அணிந்திருந்த அற்புத வரவணிக்கம் கேடையம்போல அவன் இருதயத்தின் அருகேயிருந்ததினால் துப்பாக்கிக்குண்டின் திசைமாறிற்று. வரவணிக்கம் குண்டுபட்டதின்காரணமாக உருமாறிற்று. குண்டு அவன் இருதயத்தை ஊடுருவாமல் சதையினுட்தான் புகுந்தது. சிலநாட்களின்பின்னர் அக்குண்டு வெளியே எடுக்கப்பட்டது. அவன் உயிர்தப்பியது மகத்தான ஒரு புதுமையெனக் கண்டோர் ஏகோபித்துக் கூறினார்கள். குணமடைந்த துரைமகன் மாதாவில் நன்றியறிதலும், அன்பும் நிறைந்தவனாய்ப் பாவசங்கீர்த்தனம், தேவநற்கருணை முதலாம் தேவதிரவிய அனுமானங்களைப் பக்தி வைராக்கியத்துடன் பெற்று, வைத்தியசாலையில் இருந்த நாட்களில் உத்தம மனப்பண்பைக் காட்டினான்.

---

## மரணத்தின் வாயினின்று காப்பாற்றப்பட்டாள்

கீழேயிருந்து மேல்மாடிக்கு ஆட்களைத் தூக்கிச்செல்லும் இயந்திரமொன்று பழுதுற, அதைத் திருத்திக்கொண்டிருந்தனர் சிலர். அவ்வியந்திரத்தை மேலேயிருந்து கீழே இறக்கும்வேளையில் 25 வயசுள்ள ஒரு பெண்மணியின் தலை இரண்டாம் தளத்திற்கும் தூக்குஇயந்திரத்திற்கும் இடையில் அவலமாய் அகப்பட்டுக்கொண்டது. அவளுடைய தேகம் இரண்டாம்தளத்தின் மேடையிற்கிடக்க, அவளின்கழுத்து மேடையோரத்துக்கும் தூக்குஇயந்திரத்திற்குமிடையில் அகப்பட்டுக்கிடந்தது.

தேகமுழுவதும் காயம்நிறைந்தவளாய் மூர்ச்சையுற்றிருந்த அப்பாவிப் பெண்மணியைச் சிக்கலிலிருந்து விடுவிக்க

வும், உதவிக்கு ஆட்களை அழைத்து வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லவும் சிலநிமிஷங்கள் பிடித்தன. இந்த விபத்து காலை 8மணிக்கு நிகழ்ந்தது. அன்றுசாயந்தரமே அவளுக்குத்திரும்பவும் அறிவுவந்தது. உடனுக்குடனே மண்டைஓடும், தோள்மூட்டும் 'எக்ஸ்றே' படம்பிடிக்கப்பட்டது. பழுதொன்றும் காணப்படவில்லை. ஓர் எலும்புதன்னும் முறியவில்லை. தேவதாயே தன்னைக் காப்பாற்றினாளெனத் திரும்பவும்திரும்பவும் அப்பெண்மணி வைத்தியசாலையிலுள்ள சகலரிடமும் கூறினாள்.

அவள் தன்மேல் அணிந்திருந்த அற்புதவரவணிக்கத்தை அவள் மூர்ச்சைதெளிந்தபொழுதுதான் அங்கு நோயாளிகளைப்பராமரிக்கும் கன்னியாஸ்திரிகளின் தாயார்கண்டார். தான்அணிந்திருந்த புதுமைவரவணிக்கத்தை அவள் தாயாருக்குக்காண்பித்து, அதனைஎப்போதும் தான் அணிந்திருந்ததாகவும், அது தன்னைவிட்டு ஒருபோதுமே தனித்திருக்கவில்லையென்றும் கூறினாள். " தூக்குஇயந்திரத்தில் அகப்பட்டிருக்கையிலும் இதைப்போட்டிருந்தேன்; இந்தவரவணிக்கம்தான் என் உயிரைத் தப்பவைத்தது" என்றாள் அப்பெண்மணி.

தூக்குஇயந்திரத்தை இயக்குபவன் வைத்தியசாலைக்கு அவளைப் பார்க்கப்போனபொழுது, "உன்னுடைய சிரம் கண்டத்தைவிட்டுத் துண்டிக்கப்பட்டிருக்குமென்று நீ தெரிந்தாயோ?" என்றான். "நான் சிக்குண்டபொழுது தேவதாயை மன்றாடினேன். அவள் என்னைக் கைவிடமாட்டாளென்ற நம்பிக்கை எனக்குண்டு" என்று வினயமாகவிடையளித்தாள். ஒருகாயமுமின்றியே அவள் தப்பிப்பிழைத்தது தங்கள் வாக்குக்கும், புத்திக்கும் எட்டாத சம்பவமென்றும், ஓர் அதிசயமென்றும் சகலவைத்தியரும் ஏகோபித்துக் கூறினார்கள்.

---

# தேவதாயார் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்றியது

1915-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 15-ந் திகதி விடியற்காலம் "பொன் மார்ஜே" எனும் கிரயக் கிரகத்தின் (சாய்ப்பின்) கீழ்த்தளத்தில் நெருப்புப்பற்றி யெரிந்தது. அது தரும கன்னியாஸ்திரிமார் சபைத் தாய்மடத்துக் கருகாமையிலே பரீஸ்நகரிலுள்ள பாரியசாய்ப்புகளிலொன்று. கத்தரின் லபுவோரே கன்னியாஸ்திரிக்கு அற்புத வரவணிக்கநாயகி காட்சியளித்த "றா த பாக்" கன்னிகா மடத்தின் பக்கத்திலிருந்து தீ சுவாலித்தெரிந்து, ஆயிர ஆயிர நெருப்புப் பொறிகள் வானமட்டாயெழுந்து சில மணித்தியாலங்களில் பெரிய தீச்சூளையானது. புகை மண்டியதால் அட்டம் அயலிலுள்ள வீடுகளில் வசித்திருந்தவர்கள் அவைகளை விட்டு வெளியேறினார்கள். அண்மையிலுள்ள கன்னிகாமடத்தின் சிற்றாலய வரவணிக்க கோபுரம் தீக்கிரையாகி விடுமோவென்ற அச்சமுண்டானது. இவ்விடத்திற்றான் 1830-ம் ஆண்டு அமலோற்பவநாயகி தரிசனமாகி, "மகத்தான ஆபத்து நிகழும்; சகலமும் பாழாய்ப் போம்; நம்பிக்கையாய் இரு; உன்னோடு நாம் இருப்போம்" என்றாள்.

மடத்துவாசிகள் இந்த ஆபத்து வேளையில் தேவமாதாவின் வாக்குத்தத்தத்தை நினைவுகூர்ந்து, மனத்திடன் கொண்டு நம்பிக்கையோடு அமைதியாக இருந்தார்கள்.

நெருப்புச் சுவாலை அப்பிரமாண்டமான கட்டிடத்தைச் சுட்டெரித்துச் சாம்பலாக்கினபோதிலும் அமலோற்பவ நாயகியின் வாசம் எவ்வித அழிவுக்கும் உள்ளாகவில்லை.

## வியாதிக்காரரின் ஆரோக்கியமே ......

*அற்புத வரவணிக்க விசாரணை மன்றத்திலே தேவமாதாவின் வேண்டுதலினால் அடையப்படும் ஆச்சரியத்திற்குரிய ஆரோக்கியங்களைப்பற்றி நான் வாசித்தறிந்தேன்.*

சுமார் இரண்டு ஆண்டுகளாக என் இருதயத்திலும், இடதுபுயத்திலும் தாங்கொணு வேதனையிருந்தது. இதன் அறிகுறிகள் இருதய நோயின் அடையாளங்களை ஒத்தவையாயிருந்தன. என்றாலும் ஒரு வைத்திய பரிசோதனை எனது ஐயத்தை உறுதிப்படுத்து மென்ற பயத்தினால் ஒரு போந்த வைத்திய நிபுணரிடம் ஆலோசனை கேட்பதில்லையெனத் தீர்மானம் செய்தேன். புதுமை வரவணிக்க மாதா மூலம் அடைந்துள்ள ஆரோக்கியங்களின் விபரங்களை வாசித்தறிந்த நான் வரவணிக்க மாதாவுக்கு ஒரு நவநாள் செய்யவும், புதுமை வரவணிக்கத்தை அணியவும் தீர்மானித்தேன். நவநாள் ஆரம்பமாகி மூன்று தினங்களின்பின் வேதனை தணியத் தொடங்கியது. நாலாம்நாள் அது முற்றாய்க் குணமானது. இப்போது நான் நல்ல சுகமாயிருக்கிறேன்.

வேதனைப்படும் வேளைகளிலெல்லாம் "உம்மிடம் அடைக்கலமென்று ஓடிவந்த என் மன்றாட்டைச் சென்ம பாவமின்றி உற்பவித்த பரலோக நாயகியே கேட்டருளும்" எனப் பிரார்த்திப்பேன். இந்த மன்றாட்டு, விண்ணப்பம் என்னைக் குணமாக்கியது. தேவமாதாமீதுள்ள பக்திவணக்கம், நன்றியறிதலின் அறிகுறியாக மனுமக்கள் அனைவரும் தங்கள் துன்ப துயர வேளைகளில் அமலோற்பவ நாயகியில் நம்பிக்கை வைத்துச் சகல வியாதிகளிலும் நின்று தங்களைப் பாதுகாத்தருளுமாறு பிரார்த்திக்க வேண்டும்.

# பிறிமேசன் சபைத் தலைவனின் மனந்திரும்புதல்

நியூஆர்லியன்ஸ் நகரிலுள்ள தரும கன்னியாஸ்திரிகளின் வைத்தியசாலையில் ஒருவியாதிஸ்தன் இருந்தான். அவன் "பிறிமேசன்" சபைத்தலைவன். அவன் ஒருவேதவிரோதி யென்பது அங்குள்ள அனைவருக்கும் தெரிந்தவிஷயம். அவன்கொண்ட வேதவிரோதம் எத்துணை கடூரமாய் இருந்ததென்றால், அவனைப் பராமரித்துவந்த கன்னியாஸ்திரி அவ்வளவு கவனமாயும், அன்பாயும் பராமரித்தபோதிலும் அவளை நிந்தித்துவந்தான். அவன் முற்றிலும் ஒரு ஞானக்குருடனாய் இருந்தான்.

அவன் சாகுந்தருவாயில் இருந்தபோது கன்னியாஸ்திரி அவனை அறியாமலே ஒருபுதுமை வரவணிக்கத்தை அவன் படுக்கையண்டை வைத்துவிட்டு, "என் நல்ல தாயாரே, வியாதிஸ்தனை உம்மிடம் ஒப்படைக்கிறேன்; அவனைஈடேற்றுவது இனிமேல் உம்முடைய அலுவல்; அதனால் அவனையிட்டு இனிநான் கவலைப்படமாட்டேன்" என்று தேவதாயைப்பார்த்து மன்றாடிக்கொண்டாள்.

என்னஆச்சரியம்! அன்றுசாயந்தரம் வியாதிக்காரன் முற்றாய் மனம்மாறிவிட்டானெனக் கன்னியாஸ்திரி கேள்விப்பட்டாள். முன்னொருபோதும் காணப்படாத அமைதி அன்று அவனிலே காணப்பட்டது. ஆழ்ந்த யோசனையில் அவன் ஆழ்ந்திருந்தான். கன்னியாஸ்திரி இம்மாற்றத்தைக் கண்டபோதிலும் அதனைப்பறுவாய்பண்ணாது அவனுக்கு வழமைபோல இராவந்தனம் கூறிச்சென்றாள்.

அதேநாள் இரவு ஒன்பதுமணியிருக்கும், தன்னைப் பராமரித்தவளை வியாதிஸ்தன் திடீரெனஅழைத்து, ஒரு குருவானவரை உடனே அழைத்துவருமாறு கேட்டுக்கொண்டான். அவனுடைய வேதவிரோதத்தை நன்கு அறிந்திருந்த கண்காணிப்போன் அதை ஏதோ பகிடியென்று நினைத்தான். கேட்டேகேட்டுப் பார்த்தான் வியாதிஸ்தன், கெஞ்சித்தாலும் கேட்டும் முன்போலவேநினைத்து அவர்கள் அவன் கேள்வியைப் பறுவாய்பண்ணவில்லை.

கடைசியாக, வியாதிஸ்தன் விம்மிவிம்மி அழுதான், கண்ணீர்வடித்தான். அவனுடைய இந்தஅதிசய மனமாற்றத்தை அறிந்த மற்றவியாதிக்காரர் ஆச்சரியமடைந்தார்கள். உடனடியாகக் குருவானவர் அழைக்கப்பட்டார். கன்னியாஸ்திரியும் அழைக்கப்பட்டாள். சாகவிருந்த வியாதிஸ்தன் மனந்திரும்பியவனாய் ஞானஸ்நானம் பெற்றான். மறுநாள் பொழுதுவிடியாமுன்னரே இந்தப் பிறிமேசன் சபைத் தலைவன் மரணத்திரையில் மறைந்தான். ஞானஸ்நானத்தின்மூலம் தான் அடைந்துகொண்ட வரப்பிரசாதங்களோடு அவன் பரகதிஅடைந்தான்.

---

## இரற்றிஸ்போன் அல்போன்ஸ்என்பவரின் மனந்திரும்புதல்

இவருடைய தீர்க்கமான திடீர் மனந்திரும்புதலானது தமாஸ்குஸ் நகருக்குப் போகிறபாதையிலே அர்ச். சின்னப்பரின் மனந்திரும்புதலை ஒத்ததாகும்.

இவர் செல்வாக்கும், பிரபல்யமுமான ஒரு யூத குடும்பத்தைச் சேர்ந்தவர். தம்முடையகாலத்து வாலிபரைப் போன்று வேத சத்தியங்களைப்பற்றிய உண்மையான அறிவில்லாதவர். இவரின் தமையனார் மெய்மறையைத் தழுவி ஒரு குருப்பிராசாதியாய் இருந்தார். தம்முடைய தமையனார் மனந்திரும்பியது முழு மதியீனமென்றும், கத்தோலிக்கர் மதவைராக்கியம் படைத்தவர்களென்றும் இவர் எண்ணினார். ஆகவே, தமது தமையனாரையும், சத்திய வேதத்தையும், அதன் குருமாரையும் துவேஷித்தார். இவர் 1841-ம் ஆண்டின் இறுதியிலே 28-வது பராயத்தில் தமது வீட்டைவிட்டு மத்திய கிழக்குப் பிரதேசத்திற்குப் பிரயாணமானார். அங்கே முதன் முதல் நேப்பிள்ஸ் நகரில் சிலகாலந்தங்கியபின் சில சந்தர்ப்பங்கள் காரணமாக இவர் ரோமாபுரி செல்ல நேர்ந்தது. 1842-ம் ஆண்டு தைமாதம் 6-ந் திகதி மூவிராசாக்கள் திருநாளன்று அங்கு போய்ச் சேர்ந்ததும், யூதசாதியாருக்குரிய பிரத்தியேகமான வசிப்பிடங்களை அங்கே கண்டபின் துக்க

மும், உக்கிரகோபமும் அடைந்தார். "கத்தோலிக்க சமய விரோதமான எண்ணம் அவ்வேளையில்போன்று அவ்வளவு மோசமாக வேறொருபோதும் எனக்கு இருக்கவில்லை. அதனால் அதை இகழ்ந்து கொண்டும், தேவ தூஷணங்களைச் சொல்லிக் கொண்டும் இருந்தேன்" என்று அவரே கூறுகின்றார்.

"அடுத்த தைமாதம் 15-ந் திகதியன்று முன்னொருகாலம் புறொட்டஸ்தாந்த மதத்திலிருந்து மனந்திரும்பிய பக்தி வைராக்கியமுள்ள ஒரு துரைமகனைச் சந்திக்கப் போனேன். வேத விஷயங்களைப்பற்றி இருவரும் சம்பாஷித்தோம். ரோமைத் திருச்சபையின் மாட்சிமையைக் குறித்தும், அதனால் விளையும் நானாவித நன்மைகளைக் குறித்தும் அவர் என்னுடன் பேசினார். அவர் சமூகத்தில் திருச்சபைக்கு விரோதமான காரியங்களை எடுத்துக்கூறாது மரியாதையாக என்னை அடக்கிக் கொண்டேன். அவருடைய பிள்ளைகள் எம்மண்டையிலே விளையாடிக்கொண்டு நின்றபடியால்தான் இவ்விதம் நடந்து கொண்டேன்." மேலும், அத்துரைமகன் என்னை விழித்து, "நீர் கல்வி கேள்விகளிற் சிறந்தகல்விமானாய் இருப்பதால் ஒரு பரிசோதனைக்கு இணங்க மனந்துணிவீரா? ஒருவேளை அது என்ன பரிசோதனை யென்று நீர் கேட்கலாம். ஆம், அது ஒருதீங்குமில்லாத அதிகம் சிறிய பரிசோதனை. அதாவது, நீர் கன்னிமரியம்மாளின் புதுமை வரவணிக்கத்தை அணிந்து கொள்வதுதான்" என்றார். முதலில் மாட்டேனென்று மறுக்கத்தான் அவருக்கு மனம் வந்தது. பின்னர் தமது சுற்றுப்பிரயாணத்திற் கண்டவை, கேட்டவைகளா லுண்டான மனப்பதிவுகளுக்கு இதுவும் ஒன்றாய் உதவுமென்ற முகாந்திரம் காரணமாக அவ்வரவணிக்கத்தைப் பெற்றுக்கொண்டார். அதைத் தமது கழுத்தில் அணிகிறவேளை, "நான் கத்தோலிக்க அப்போஸ்தலிக்க கிறிஸ்தவனுனேன் இப்போது" என்று பரிகாசமாய்க் கூறினார். வரவணிக்கத்தை அணிகிறது மாத்திரமன்று, "மிகவும் இரக்கமுள்ளதாயே" எனும்செபத்தைச் சொல்லும்படியும் நான் அவரை ஏவினேன். அப்போது சடுதியாய் வேதவிரோதம் அவரைக் கடுமையாய் ஆட்கொள்ள, "மிகவும் இரக்கமுள்ளதாய் என்பதின் கருத்து யாது?

என்னைப் பரிகாசம் பண்ணவேண்டாம்; இதை என்னிடமிருந்து எடுத்துக்கொள்ளும்" என்று என்னை நோக்கிக் கூறினார். நானோ வரவணிக்கத்தை அணிந்து கொள்ளுமென்று திரும்பவும், திரும்பவும் இரந்து கேட்டுக்கொண்டதின்பேரில் இந்தயூதர் எனது கேள்விக்கு இணங்கினார். வரவணிக்கத்தை அணியவும், செபத்தைச் சொல்லவும் சம்மதித்தார். அப்படிச் செய்யும்போது, "நன்மை ஏற்படாவிட்டாலும் தின்மை விளையாது" என்றேன். அம்மந்திரத்தை எழுதி வைக்கவும் அவர் ஒப்புக்கொண்டார்.

இரற்றிஸ்போன் அடுத்தநாள் பிரயாணத்துக்குவேண்டியதைத் தயார்செய்துவிட்டு, அன்றிரவு படுக்கைக்குப் போகையில், "மெமோரறே" அதாவது "இதோ, உம்முடைய அடைக்கலமாக......" என்ற மந்திரத்தை விரைவாய்ச் சொன்னார். அச்செபத்தின் வாக்கியங்கள் அவர் ஞாபகத்தில் நன்றாய்ப் பதிந்திருந்தன. மறுநாள் அவர் நகரினூடாகப் பிரயாணம்செய்கையிலுமே அவைகள் அவர் நினைவில் நன்கு பதிந்திருந்தன.

தைமாதம் 17-ந்திகதி செய்யப்படவிருந்த பிரயாணம் 20 ந்திகதிக்குப் பின்போடப்பட்டது. ஆகையால், அவர் அன்றும் நகரினூடாகச் சென்றார். செல்லுகையில் தமக்கு வரவணிக்கம் கொடுத்த நண்பரை மீண்டும்சந்தித்தார். அப்பொழுது நண்பர் இரற்றிஸ்போனைத் தம்முடன் சவாரி போக அழைத்தார். யூதரும் அதற்குச் சம்மதித்து வண்டியில் ஏறினார். வழியிலே நண்பர் தாதுஒன்றை அர்ச். அந்திரேஸ் டெல்விறற் எனும் கோவிலுக்குக்கொண்டுசெல்ல வேண்டியிருந்ததால், அக்கோவிலண்டை வந்ததும் யூதரை வண்டியில் சற்றுநேரம் தங்கியிருக்கும்படி செய்துவிட்டு, அவர் தூதையும்கொண்டு உள்ளே சென்றார். யூதரோ அவரைப் பின்தொடர்ந்துபோக விரும்பி, வண்டியைவிட்டு இறங்கிக் கோவிலுட்சென்றார். தமாஸ்குஸ் நகருக்குப் போகும்பாதையில் அர்ச். சின்னப்பர் மனந்திரும்பிய பிரகாரம் தடுக்கப்படமுடியாத வரப்பிரசாத உதவியால் உந்தப்பட்டுச் சடுதியாய் இவரும் மனந்திரும்பிப் புதுமனிதனானார். இவர் தானே கூறுவதை அவதானிப் போமாக:

"கோவிலுள் சிறிதுவேளை தங்கியிருக்கையில் இருந்தாற்போல் ஒருவித மனஅருட்சி உண்டாகித் தேவவரப்பிரசாதம் என்னைமேற்கொண்டது. ஏறெடுத்துப் பார்க்கையில் கோவிற்கட்டிடம் என் கண்களுக்கு மறைந்தது.

"அப்பாரிய கட்டிடத்தினுள் ஒருசிற்றாலயம் தெய்வீக சோதிமயமாய் விளங்கியது. கண்ணைப்பறிக்கும் பிரகாச மத்தியிலே, புதுமைவரவணிக்கத்திற் காணப்படும்மேரையாய்ப் பரிசுத்த கன்னிமரியாய் மாட்சிமையும், மதுரமும் நிறைந்தவளாய்ப் பீடத்தின்மேடையில் ஏறினுள், தவிர்க்கப்படமுடியாத ஒருசக்தி அவள்பால் என்னை வலிந்திழுத்தது. முழந்தாளிடும்படி திருக்கன்னிகை எனக்குச் சைகை காட்டினுள். யாவும் இனிதேமுடிந்தது. அவள் சொல்லாமலே யாவையும் நான் புரிந்துகொண்டேன்."

அமலோற்பவ நாயகியின் புதுமை வரவணிக்கத்தை இரற்றிஸ்போன் முத்தமிட்டபடியும், அவிசுவாசியாய் நையாண்டிபண்ணிக் கொண்டுவந்தவர் முழந்தாளிட்டபடியும் இருக்கக் கண்டபொழுது, அவரின் நண்பர் ஆச்சரியவசத்தராய் நடந்தது என்னவென்று வினவியபோது, அவர் ஒன்றுமே பேசமுடியாது ஸ்தம்பித்துப்போய் நின்ருர்.

கோவிலைவிட்டு வெளியேறியதும் யூதர் கேட்டுக்கொண்டபடி துரைமகன் ஒருயேசுசபைக் குருவானவரிடம் அவரை அழைத்துச்சென்ருர். பரலோகநாயகி தமதுபுத்தியைத் தெளிவித்துத் தம்மைமனந்திருப்பிய அற்புதவிதத்தை அந்தயூதர் குருவானவரிடம் விளக்கமாக எடுத்துக்கூறினுர்.

இவர் பதினெருதினங்களின்பின் ஞானத்தீட்சைபெற்று, 'மேரி' என்ற நாமத்தைத் தமதுபெயரோடு இணைத்து, உலகப்பற்றைத் துறந்து, ஆன்மஈடேற்ற அலுவலில் ஈடுபடத் தீர்மானித்துக்கொண்டார். காலகதியில் இரற்றிஸ்போன் அல்போன்ஸ் மேரி ஒரு குருவாய்வந்து தமது சகோதரர் தியடோர்அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட "சீயோன்" எனும் பரலோகநாயகி சபையில்சேர்ந்து யூதர்களை மனந்திருப்பும் வேலையில் ஈடுபட்டார்.

# மரண ஆபத்தில் நின்று காப்பாற்றப்பட்டவன்

கனடாவிலே அர்ச். லோறன்சியார் குடாக்கடலின் அந்தாமையிலுள்ள பிறின்ஸ் எட்வேட் தீவிலிருந்து கு மார் ஐம்பதுமைலுக்கு அப்பால் இருக்கும் மக்டலீன் தீவுகளில் 1959-ம் ஆண்டு ஐப்பசிமாதம் அமலோற்பவ மரியநாயகி பரித்தியாகிகள்சபைக் குருமார் இருவர் ஞானவொடுக்கம் போதித்தபொழுது, ஆபத்துவேளைகளில் தேவதாயின் உதவியைத் தேடும்படியாக எல்லோரும் புதுமை வரவணிக்கத்தை அணிந்துகொள்ள வேண்டுமென்று வற்புறுத்திக் கூறினார்கள்.

சிலநாட்களின்பின் கன்னிமரியாயின் உதவியால் சீவ ஆபத்தில்நின்று பாதுகாக்கப்பட்டான் ஒருவன்.

ஒருலொறிச் சாரதியான அவன் பாலமொன்றின் வாயிலிலுள்ள ஒரு வளைவைத்தாண்டிச் செல்லுகையில் மோட்டர் இரதமொன்று எதிர்முகமாக விரைந்து வந்துகொண்டிருந்தது. அப்போதுசாரதி தன்லொறியைத் திடீரெனப் பலவந்தமாய் ஒருபக்கம் திருப்பினான். "பிறேக்" தடையைப் போடாது, 'அக்சிலறேற்றரை'' (விசைகாட்டியை) தடுமாற்றத்தில் அழுத்தினான். உடனே லொறி பாலத்தின்கிறாதிகளை உடைத்துக்கொண்டு, சாரதி தனது ஆசனத்தில் இருக்க, கடலுக்குள்ளே 25 அடி ஆழத்தில் வீழ்ந்தது. அவன் நினைத்தால் அரைவாசி திறந்திருந்த சாளரத்தின்வழியாக வெளியிற் பாய்ந்து தப்பியிருக்கலாம். ஆனால், அந்தநினைவேயில்லாமல் இந்தஆபத்துவேளை தேவதாயையே நினைத்தான். அதனால் அவளிலேயே தனது முழுநம்பிக்கையையும் வைத்தான். கடலின்மேல் மிதந்துமிதந்து கரையைச்சேரத் தெண்டிக்கையில் வீச்சுள்ள நீரோட்டம் ஒன்று அவனை நடுக்கடலுக்கு இழுத்துச்செல்ல, சமயோசிதமான விவேகத்துடன் மிதந்துகொண்டே அண்டையிலுள்ள ஒருதீவை அடைந்தான். தண்ணீரில் அமிழ்ந்தித் திக்குமுக்குப்பட்டுச் சாகாமல் அவன் தப்பிப்பிழைத்தது எவ்விதம்?

கடலின் அடித்தளத்தில் சொருகப்பட்டுக்கிடந்த லொறியி லிருந்து அவன் வெளியேகொண்டு வரப்பட்டது எப்படி? நீந்தத்தெரியாத இவன் மிதந்துமிதந்து கரையைச்சேர்ந்து தப்பித்துக்கொண்டது எவ்வாறு? இவ்விஞக்களுக்கு நாம் விடைபகர வேண்டுமாஞல், தேவதாயைத்தான் வினவ வேண்டும். அவள் பகருவாள்.

## "விடியற்காலத்தின் நட்சத்திரமே"

விடியற்காலத்தின் நட்சத்திரமேஎன்று நாங்கள் பரிசுத்த கன்னிமரியாயை அழைக்கின்ருேம். பின்வரும் சம்பவம் நம்மைத் திடுக்கிடச் செய்கின்றது. இது 1952-ம் ஆண்டு ஐப்பசிமாதம் நடந்தேறியது. இது ஒரு கத்தோலிக்க தாயால் கூறப்பட்டுள்ளது.

என்னுடையமகன் கடற்படையிலே பணியாற்றி வந்தான். அவன் ஒருதடவை கடற்பிரயாணமாய்ப் பசிபிக் சமுத்திரத்திஞடே ஒருசிறுமரக்கலத்தில் சிலவேலையாட்களுடன் பிரயாணம்செய்து கொண்டிருந்தான்.

இவர்கள் பிரயாணம் செய்துகொண்டிருந்த தருணம் கடலில் பெரும்புயல்வீசியது. 24மணிநேரமாக அந்தமரக்கலத்தில் இவர்களும், அதில்சென்ற ஏனையபிரயாணிகளும் தங்கள்உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தார்கள், எதிர்பாராதவிதமாய் அற்புதவிதமாகச் சுக்கானின்உதவியால் எவருக்குமே ஒருவிதசேதமும் இல்லாமல் அந்தமரக்கலம் ஒருதுறைமுகத்தை அடைந்தது.

என்மகனுக்கு இப்படியான ஓர் அபாயநிலை ஏற்படுமென்று நான்நினைக்கவில்லை. இந்தஅபாயகரமான சம்பவம் நடைபெறும்பொழுது நான் பரீஸ்நகரிலுள்ள அற்புதவரவணிக்க அமலநாயகியின் சிற்ருலயத்தில் என்மகனுக்காகப் பிரார்த்தித்துக்கொண்டிருந்தேன்.

நான் செபம்பண்ணிமுடிந்து ஆலயத்தைவிட்டு வெளியேறியதும் என்மனதில் ஒருநல்ல எண்ணம் உதித்தது. அதாவது, "அமலநாயகியின்புகழை எங்கும்பரப்பி யாவரும் அவளிலே நம்பிக்கைவைக்க வேண்டுமென்ருல், இந்தஅற்

புதவரவணிக்கம்பற்றிய துண்டுப்பிரசுரங்களை எங்கும் பரப்ப வேண்டும்" என்பதுதான். ஆகவே, நான் எனதுகை கொள்ளக்கூடிய துண்டுப்பிரசுரங்களை எடுத்துக்கொண்டு என் மகனைப்பற்றிச் சிந்திக்கலானேன்.

ஆழ்ந்த நன்றியறிதலோடும், மிகுந்தஉணர்ச்சியோடும் எங்கள் மோட்சதாயைநோக்கி நான்செய்தசெபம் கேட்கப் பட்டு விட்டதெனத் தெரிவிக்கும்படியாக இவ்வரிகளை எழுதலானேன்.

---

# அற்புத வரவணிக்கமே என்னைக் காப்பாற்றியது

இரசாயன உற்பத்திஸ்தான பொருட்சாலையில் பின்வரும் சம்பவம்நிகழ்ந்தது.

சாயந்தரம் 4மணிவேளை தொழிலாளர் வேலைசெய்து கொண் டிருந்தார்கள். இருந்தாற்போல் ஓர் அதிர்ச்சி உண்டாகிச் சுவர்களைஉலுப்பியது. உடனே அவர்களெல்லாம் வெளியே ஓடினார்கள். பின்னர் நடந்ததுஎன்ன?

நூறுகலனுக்கு மேற்பட்ட காரமான இரசாயனப் பதார்த்தங்களில் தீப்பற்றியது. அவைகள் இருந்துவந்த பாரியதொட்டி பிளந்தது. அதுபுரண்டு இருப்பிடத்தையே விட்டு இடம்பெயர்ந்தது. ஒருபாரியபிளவு காணப்பட்டது. தொட்டியைக் கவனிக்குமாறு பொறுப்பிக்கப்பட்ட வாலிபன் அதன்கீழ் அகப்பட்டு நசிபட்டிருப்பானென அங்கிருந்த எல்லோரும் எண்ணினார்கள். ஆனால், அவனோ சேமமாய் இருப்பதைக் கண்டவர்களும், அவனைப்பற்றி அங்கலாய்ப்புக் கொண்டவர்களும் சந்தோஷம்கொண்டார்கள்.

அவன் எவ்விதம் தப்பிப்பிழைத்தானென்று பிறர் வினவியபொழுது, அவன் தான் அணிந்திருந்த புதுமை வரவணிக்கத்தைக் காட்டி, "இதுதான் என்உயிரைக் காப்பாற்றின"தென்று விடைபகர்ந்தான். தொட்டிபிளக்கும் பொழுது ஆயுதமொன்றை எடுத்துவர அவன் வெளியே போயிருந்தான். அப்பொழுது அங்கே நின்றவர்களைப் பறுவாய்பண்ணுது பிரியதத்தமந்திரத்தைச் சொல்லிக்கொண்டிருந்தான்.

---

# கைதி ஒருவன் புதுமையாகக் குணமடைந்தது

1962-ம்ஆண்டு தைமாதம் 6-ந்திகதி தென்னமெரிக்கா வைச் சேர்ந்த பிறேசில்நாட்டிலே, சாம்பவுலோநகர சிறைச் சாலையிலே கைதிகளின் ஆத்மீகநலனை முன்னிட்டுத் தகுந்த ஆயத்தங்களுடன் திவ்வியபூசைப்பலி ஒப்புக்கொடுக்கப்பட் டது. அங்குள்ள அற்புதவரவணிக்க மாதாகோவில் பங்குக் குருவரும், வரவணிக்கமாதாவின் பக்தருமான குருவானவர் அந்தநிர்ப்பாக்கிய கைதிகளுக்கு உருக்கமான ஒருபிரசங்கம் செய்தார். பூசைமுடிவிலே பாலகயேசுவின் திருச்சுரூபம் ஒன்றைத் தமதுகரங்களிலேந்தி அதனைஎல்லோரும் முத்த மிடப்பண்ணினர். பின்னர் ஒருகன்னியாஸ்திரி அவர்கள் ஒவ்வொருவருக்கும் முறையேஒவ்வோர் அற்புதவரவணிக்கத் தைக் கொடுத்துவந்தாள். அப்பொழுது ஒ நவிசேடவரத் தை இரந்துகேட்கும்படியாகக் குருவானவர் அவர்களுக்குப் புத்திமதிகூறினர்.

விலாடிமீர் மனுவேல் நாமென்ரோ என்றகைதி தன் முன்பாகவந்ததும், "வரவணிக்கத்தைப் பெற்றுக்கொள்ள உனக்குச் சம்மதமா?" என்று கன்னியாஸ்திரி அவனைக்கேட் டாள். ஏனெனில் இவன் ஒருபுரொட்டஸ்தாந்த மதத்தவன். 22 வருடகாலமாக வாதரோகம்கண்டு வருந்தினன். அதனல் கக்கதண்டங்களின் உதவியின்றி இவன் நடந்தறியான். இவனை அவன்சகாக்கள் தூக்கியெடுத்துக் கோவில்கொண்டு போய்ச் சேர்த்தனர். வரவணிக்கத்தைக் கொடுக்கும்போது, "உன்னைக் குணமாக்கும்படியாகப் பரிசுத்தகன்னிமரியாயை இரந்துமன்ருடு" என்று கன்னியாஸ்திரி அவனுக்கு நன்மதி கூறினள். வியாதிஸ்தனும் மனப்பூர்வமாக அதைப்பெற்று, "இந்தக்கன்னியாஸ்திரியின் அற்புதவரத்தியே என்னைக் குணமாக்கும்" என்று பயபக்தியாக மன்ருடியபொழுது, உடனடியாகத் தான்சுகமடைந்ததை அவன்உணர்ந்தபோதி லும் யாதொன்றும்பேசாது அசைவற்று மெளனமாக நின்ருன்.

அன்றுதான் நத்தால்வெகுமதிகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டன. அருகாமையில் நின்ற கைதிஒருவன் வியாதிஸ்தனின் வெகுமதிப்பையை அவனுக்கு வாங்கிக்கொடுக்கவென்று நான்குயார் தூரம் முன்னடந்து செல்லவில்லை, அதற்கிடையிலே கால்வழங்காதிருந்தவன் திடீரெனஎழுந்து தானாகவே அந்தவெகுமதியைப்பெற அவனைத்தாண்டி முன்நடந்துசென்றான். ஏனையவர்கள் இதைக்கண்டதே அவன் விழுந்துவிடுகிறானோ எனப்பயந்து அவனைத்தடுத்தபோதுதான் அவன் சொஸ்தமடைந்தது உண்மையெனக் கண்டார்கள். அவனோ ஆனந்தக்கண்ணீர்பெருக, "நான் சுகமடைந்துவிட்டேன்" என்று பலமுறை உரத்துக்கூறினான். ஒருகொலைகாரனான இந்தவாதரோகி குணமடைந்ததையிட்டு எல்லோருமே ஆச்சரியமடைந்தார்கள். சிறைச்சாலை வைத்தியரது வேண்டுகோளின்பேரிலே பிறவைத்தியர்கள் அழைக்கப்பட்டுவந்து அவனைப்பரிசோதித்தபோது, 'இது ஒரு புதுமையே; மற்றப்படி இதனை விளக்கமுடியா" தென்று சாட்சி பகர்ந்தனர்.

அற்புதவிதமாகக் குணமடைந்த இந்தக்கைதி அதே வருடம் ஆடிமாதம் 27-ந் திகதி காவலர்இருவர் பின்தொடர அற்புதவரவணிக்கமாதா கோவில்சென்று இனிமேல் தனக்குத் தேவைப்படாத இருக்கத்தண்டங்களையும் தனது நன்றியறிதலின் சின்னங்களாக மாதாவின் திருப்பாதங்களிலே காணிக்கைவைத்தான். பரிசுத்த கன்னித்தாய் நிர்ப்பாக்கியர்கள்மட்டிலும் காண்பிக்கின்ற காருண்ணியத்திற்கு இச்சம்பவமும் ஒருசான்றாகும்.

---

## விபத்தினின்று உயிர்தப்பியது

எனது கணவர் ஒரு லொறிச்சாரதி. அவர் இரண்டு நாள் இரவிரவாக வேலைசெய்தபின் மூன்றுவதுநாள் இரவும் வேலைக்குப்போக வேண்டியிருந்தது. சிறிதுவேளை நித்திரை செய்தபின் அவர் லொறியுடன் புறப்பட்டுப்போனுர். போகும்போது அவர் தன்னை அறியாமலே அயர்ந்துபோயினுர். அதனுல் அந்தப்பாரிய லொறி போனபோக்கிலே ஒருமதிலில் மோதியது. அதிலே எரிபொருட்கள் ஏற்றப்பட்டிருந்தும் என்ன அதிசயம்! அவற்றிலே தீப்பற்றவில்லை. இந்த விபத்தினுல் சாரதியின் ஆசனம் சப்பையானது. அதிலிருந்து அவர் வெளியிலே வீதியில் தூக்கிவீசப்பட்டார். ஆயினும் காயம் யாதுமின்றியே அற்புதவிதமாகக் காப்பாற்றப்பட்டார். எனதுபிள்ளைகள் கொடுத்த அற்புதவரவணிக்கம் ஒன்றை அவ்வேளையிலும் அவர் அணிந்திருந்தார். தேவதாயாரின் அருளால் அற்புதமாகத் தான்காப்பாற்றப் பட்டதாக அவர் திடமாகக்கூறினுர்.

---

## நவநாளின் மூன்றும்நாள்

பிறர்சிநேக சபையைச்சேர்ந்த ஒரு கன்னியாஸ்திரி ஒருநாள் தபாற்கந்தோரிலே கடிதம்ஒன்றைப் பதிவுசெய்யக் காத்துநின்ருள். அப்பொழுது அங்கே கடமையாற்றிய பெண்மணியின்முகத்திலே கவலைக்குறிகள் காணப்படுவதை அவள்கவனித்தாள். கடிதத்தைப் பதிந்தபின் அந்தப்பெண்மணி கன்னியாஸ்திரியைநோக்கி அச்சத்துடன கூறுவாள்: "தாங்கள் எனது விசேடகருத்துக்காக மன்ருடுவீர்களா? எனக்கு ஒருபெருங்கவலை ஏற்பட்டிருக்கிறது" என்ருள். "நம்பிக்கையாய் இருங்கள்; நிச்சயமாக நான்மன்ருடுவேன்." இதைக்கேட்ட அப்பெண்மணி, "நேற்றைய தினம் எனது கணக்கிலே 1,500 பிராங் குறைகிறது; காரணம் தெரியவில்லை; என்தாயையும் தாபரித்துவருகிற எனக்கு இது பெரும்நஷ்டமாகும்" என்ருள். "அற்புதவரவணிக்கமாதாவுக்கு இன்றே ஒருநவநாள் தொடக்குங்கள்; நானும் தங்களுடன்சேர்ந்து தொடக்குகிறேன்; இந்தவரவணிக்கம்

புதுமையானது'' என்று கன்னியாஸ்திரி கூறினுள், "மிகவும் நன்றி; ஆனுல், நவநாளுக்கு என்னசெய்ய வேண்டுமென்று தெரிவியுங்கள்."

"நாங்கள் தினமும் மூன்றுபிரியதத்தமந்திரமும், மூன்று தரம்வரவணிக்கத்திலுள்ள செபமும் சொல்லுகிறேரும்", "சரி, ஆகட்டும்" என்றுள் உதவியைநாடிய அப்பெண்மணி.

சிலதினங்களின்பின் அதேகன்னியாஸ்திரி மீண்டும் தபாற்கந்தோருக்குப் போகநேர்ந்தது.

அப்பெண்மணி அவளைக்கண்டதே ஆனந்தமாக வரவேற்றுக் கூறுவாள்: "சங். கன்னியாஸ்திரியே, நான் கேட்டமன்றுட்டு நவநாளின் மூன்றும்நாளே அனுகூலமானது. அன்று தபாற்கந்தோர் அதிபர் கணக்குமுடிக்கையில், ஆயிரம்பிராங் நோட்டுகளைக்கொண்ட ஒருகட்டிலே பத்துக்குப்பதிலாகப் பதினெருநோட்டுகள் இருக்கக்கண்டறிந்தார். மேலும் ஒருநல்லபெண் தனக்கு மேலதிகமாகக் கொடுபட்ட 500 பிராங்கையும் திரும்பக் கொண்டுவந்து கொடுத்தாள். ஆகவே, மாதாவின் அனுக்கிரகத்தால் 1,500 பிராங்கையும் நான்கண்டடைந்தேன். இந்தப்புதுமையை அறியவந்த பலரும் இந்தவரவணிக்கத்தைத் தேடுகின்றனர். எனக்குச் சில தருவீர்களா?'' கன்னியாஸ்திரியும் சந்தோஷத்துடன் தன்னிடமிருந்த வரவணிக்கங்களைக் கொடுக்க, அவளும் ஆனந்தத்துடன் அவைகளைப் பெற்றுக் கொண்டாள்.

---

## அற்புத வரவணிக்கமும் அகோரபுயலும்

ஷார்துபதிக்கு அருகாமையிலே பிறர்சிநேகசபைக் கன்னியாஸ்திரிகள் வீட்டுப்பணிப் பாடசாலையொன்று நடத்தி வருகின்றுர்கள். அங்கே ஒருநாள் சண்டமாருதம்போன்று அகோரபுயல்வீசிப் பெரும்அழிவை உண்டுபண்ணியது. இரு பாரியமரங்கள் கற்கட்டிடத்தின்மேல் குறுக்கும்மறுக்குமாக விழுந்து அதனைத் தகர்த்துவிட்டன. அவ்வேளை இரு

கன்னியாஸ்திரிகள் மட்டும் அங்கு ஓர் அறையிலே நித்திரையாயிருந்தனர். அயலிலுள்ள கமக்காரர் அவர்களை மீட்டெடுக்க விரைந்துசென்றபொழுது ஆச்சரியவசத்தராய் ஸ்தம்பித்து நின்றனர். கட்டிடம் சுக்குச்சுக்காக நொருங்கியபோதிலும் அவர்களுக்கு எந்தவிதமான அபாயமோ, காயமோ ஏற்படவில்லை. அவர்கள் சயனித்திருந்த அறையின் குறுக்குச்சுவர் இடியாதிருந்தது பேரதிசயமே. இருவருக்கும் மேலாகவிருந்த கூரை தொங்கிநின்றதும் பெரும் அதிசயமே. மடத்துத்தாயார் இதுவிஷயமாய்க் கூறியதாவது: "இருகன்னியாஸ்திரிகளும் நசுங்காதது பெரும் புதுமையே. கண்டவர்கள் எல்லோரும் — விசேஷமாக மகாவந். எங்கள் மேற்றிராணியாண்டவரும் பிரமிப்புடன் இதனை ஒப்புக்கொண்டார்கள்."

கிராமவாசிஒருவன் சொல்லுகின்றான்: "கன்னியாஸ்திரியே! கடவுள்ஒருவர் இருக்கிறாரென்று விசுவசிக்க வேண்டும். இல்லாவிடின் இதைநேர்முகமாகவந்து பார்க்க வேண்டும்." கத்தரீன் லபுறேயின் சகோதர கன்னியாஸ்திரிகள் எல்லோரும் மாதாவின் அற்புத வரவணிக்கத்தை அணிவதுமல்லாமல் மாசில்லாமல் உற்பவித்த மாதாவின்பக்தியைப் பரப்புவதிலும் அதிகம் பிரயாசப்படுகின்றார்கள்.

---

## சிறுமி தந்தையை மனந்திருப்புகிறாள்

ஒருசிறுமி ஞானவொடுக்கப் பிரசங்கங்களைக் கேட்டுக்கொண்டுவந்தாள். ஒருபிரசங்கத்திலே போதகர் பின்வருமாறு சொன்னார்: "அற்புத வரவணிக்கத்தில் இருக்கின்ற 'ஓ, மாசில்லாமல் உற்பவித்தமரியாயே, உமது சலுகையைத் தேடிவரும் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்' என்ற செபத்தை மனஉருக்கமாக மூன்றுமுறை சொல்லுகிறவர்கள் ஞானவொடுக்கத்தைச் சரிவரச்செய்து, நல்ல பாவசங்கீர்த்தனம்பண்ணும் வரத்தைத் தேவதாயாரிடமிருந்து பெற்றுக்கொள்வார்கள்."

ஒருநாள் ஞானவொடுக்கம் முடிந்து அச்சிறுமி வீடு சேர்ந்ததும் ஓர்அற்புத வரவணிக்கத்தைத் தன்தந்தையிடம் காண்பித்து, "அப்பா, எனக்கு ஒருவரவணிக்கம் கிடைத்தது; இதிலுள்ள வார்த்தைகளை நீங்கள் வாசிப்பீர்களா?" — "ஏன் உனக்குத்தானே வாசிக்கத்தெரியும்" — "ஆமாம், ஆனால், சிறியஎழுத்துகளாயிற்றே." — சரி, கேள், 'ஓ, மாசில்லாமல் உற்பவித்த மரியாயே, உமது சலுகையைத் தேடிவரும் எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்" விளங்கியதா?— "மெத்தப்பெரிய உபகாரம்."

சிறிதுவேளையின்பின் சிறுமி திரும்பச்சென்று, "அப்பா, இதைத் திரும்பவும் வாசியுங்கள்; நான் இதை மனப்பாடம் செய்ய ஆசைப்படுகிறேன்." அப்போது தந்தை அச்செபத்தைத் திரும்பவும் வாசித்தார்.

ஒருமணிநேரம் சென்றபின் சிறுமி திரும்பவும்சென்று, "அப்பா, உங்களிடம் இன்னும் ஓர்உதவி கேட்கப்போகிறேன்: தயவுசெய்து கோபிக்கவேண்டாம்; இந்தச் செபத்தை ஒரு கடுதாசித்துண்டில் எழுதி எனது புத்தகத்துள் வைக்க ஆசையாயிருக்கிறது; இதைச் சொல்லிச் சொல்லிப் பெரிய எழுத்திலே எழுதித்தாருங்கள்."

தந்தை அவளுடைய கேள்விப்படியே செய்தார். எழுதி முடிந்ததும் சிறுமி அவர் கழுத்தைத்தாவிக் கட்டியணைத்து ஏதோவெற்றி கண்டவள்போல் சொல்லுவாள்: "அப்பா, மெத்தச்சந்தோஷம்; இந்தச்செபத்தை மூன்றுதரம் சொல்லுகிறவர்கள் ஞானவொடுக்கம் நன்றாகச்செய்வார்கள் என்றார் ஞானவொடுக்கம் போதிக்கும் சுவாமியார்; நீங்கள் மூன்றுதரம் இதைச் சொல்லிவிட்டீர்கள்; அதனால் ஞானவொடுக்கத்துக்குச் சென்று நல்ல பாவசங்கீர்த்தனம் செய்வீர்கள் தானே." இதைக் கேட்டதும் தந்தை உணர்ச்சிவசப்பட்டவராய் மகளை ஒருகால் அன்புபெருக அணைத்து முத்தமிட்டார், மனந்திரும்பினார்.

---

# போர்க்களத்தில் குண்டின் கேடயம்

தென்பிரான்சிலே பிரேயுஸ் பட்டினத்தில் பிரசுரமாகும் வாரப்பத்திரிகைஒன்று முதலாவது உலகயுத்தத்தில் நிகழ்ந்த ஆச்சரிய சம்பவம்ஒன்றைப் பின்வருமாறு விபரிக்கின்றது.

எங்கள் போர்வீரர்கள் போர்க்களத்துக்குப் புறப்படும் போது எங்கள் மேற்றிராணியாண்டவர் புகையிரதநிலையஞ் சென்று அவர்களை வாழ்த்தி வழியனுப்புகையில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வோர் அற்புதவரவணிக்கம் கொடுத தார். சிலவாரங்கள் சென்றபின் காயப்பட்டவர்களை நீஸ் நகருக்கு ஏற்றிச்சென்ற புகையிரதம் பிரேயுஸ்பட்டினத்தில் தரித்துச்சென்றது. அப்போது ஒருபோர்வீரன் அதிலிருந்து இறங்கி அங்குமிங்குமாக மேற்றிராணியாண்டவரைத் தேடி ஞன். ஆனுல், அவரோ அங்கிருக்கவில்லை. அதனுல் அவன் அவர் கொடுத்த அற்புத வரவணிக்கத்தால் தான் உயிர் பிழைத்ததாக அவருக்குத் தெரிவிக்கும்படி அங்கு நின்றவர் களைக் கேட்டுக்கொண்டான்.

யுத்தத்திலே எதிரிகளின் துப்பாக்கிக்குண்டு ஒன்று அவன்மார்பில் தாக்கியது. ஆனுல், அற்புதவரவணிக்கம் ஒரு கேடயம்போல் இருந்தபடியால் குண்டுசறுகித் தோளின் அருகை உரஞ்சிப்பாய்ந்து போனவழியைக் காட்டியது. தான் சொன்னதற்கு அத்தாட்சியாகச் சுருண்டிருந்த வர வணிக்கத்தைப் பெருமிதத்துடன் அவர்களுக்கு எடுத்துக் காட்டி நன்றிதெரிவித்துப் போயினுன்.

" அற்புத வரவணிக்கத்தை அறியாதவர் ஆர்? பரீஸ் நகரிலே அர்ச். வின்சென்ற் டீ போலின் ஓர்எளிய மகளிருக்கு அறிவிக்கப்பட்ட இந்த அமலஉற்பவ வரவணிக்கம் உலக மடங்களும் ஆன்ம, சரீர புதுமைகளைப் பொழிகிறது"

12-ம் பத்திநாத பாப்பானவர்.

## பிள்ளைப்பாக்கியம் பெற்றேன்

பதின்மூன்றுவருடகால இல்லறவாழ்க்கையிலே எனக்குப் பிள்ளைப்பாக்கியம் கிடைக்கவில்லை. அதனால் மனச்சந்தோஷமற்று அதற்காகத் தினமும் கடவுளைக் கையெடுத்து வந்தேன். சுத்தவாளரை இரந்துமன்றாடினேன். நண்பர்கள், குருப்பிரசாதிகள், சந்நியாசர்களின் செபஉதவியை நாடினேன். வைத்தியநிபுணர்களின் ஆலோசனைப்படி பல மருந்துகளையும் சாப்பிட்டேன். சத்திர சிகிச்சைகள்தானும் செய்வித்தேன். பத்தியம் காத்தேன். பணத்தை அள்ளி இறைத்தேன்.

காலஞ்சென்ற வண. ஜோர்ஜெஸ்சுவாமியார் எனக்குண்டானகவலையை அறியவந்து அற்புதவரவணிக்கத்தின் அதிசயவல்லமையை எனக்குவிளக்கினார். அதில் ஒன்றை ஆசீர்வதித்து எனக்குத்தந்தார். அதிலுள்ள "ஓ,மாசில்லாமல் உற்பவித்தமரியாயே, உமதுசலுகையைத் தேடிவரும் எங்களுக்காக மன்றாடும்" என்ற செபத்தைத் தினமும்சொல்லி வரும்படி கற்பித்தார். அவர்சொன்னபடியே நான்செய்து வந்தேன். ஆறுமாதகாலத்தில் நான்கேட்டவரம் எனக்குக் கிடைத்துவிட்டதாக அறிந்துகொண்டேன். பின்னரும் தொடர்ந்து செபத்தைச் சொல்லிவந்தேன். அற்புதவரவணிக்க மாதாவின்அருளால் 1959 ம் ஆண்டு ஒருபெண் மகவைப் பெற்றெடுத்தேன். வைத்தியசாஸ்திர வல்லமையைக் கடந்துவிட்டது மாதாவின்புதுமை.

எனது இருதயபூர்வமான நன்றியறிதலின்அடையாளமாக எனதுமகவுக்கு 'மரியா' என்று பெயரிட்டேன். அத்துடன் கடந்தகாலத்திலே என்னைஆட்கொண்டிருந்த துயரின் ஞாபகமாக மாசில்லாதமரியாயின் அன்னையான அன்னாவின்பெயரையும் சேர்த்துக்கொண்டேன். நான் பெற்ற இந்தஅரிய பாக்கியத்தையிட்டு என்மனதிலெழும் நன்றியறிதலின்உணர்ச்சியை எனதுநாவினால் நவிலமுடி

யாது. ஆகவே, இக்கடிதத்தை அச்சிட்டுப்பரப்புமாறு அனுப்பிவைக்கிறேன்.

மரியாயின்மகிமையை மக்களெல்லாம் புகழ்ந்துபாடட்டும்! மரிய அன்னையை அருளியதற்காக ஆண்டவருக்கு என்னுடன்சேர்ந்து தோத்திரம் சொல்லட்டும்.

---

## பிசாசு துரத்தப்பட்டது

சீனுவிலிருந்து ஒருகுருவானவர் பின்வரும் சம்பவத்தை எழுதியனுப்பி யிருக்கிறார். மாதாவின் அற்புத வரவணிக்கம் பிசாசை வெற்றிகொண்ட அதிசய வல்லபத்தை இது எடுத்துக் கூறுகிறது. ஓர் அஞ்ஞான விதவையின்மகன் பிசாசு பிடித்துப் பெரிதும் துன்பப்பட்டான். அவன் கடுமையாக வாதித்து அலைக்கழிக்கப்பட்டு, வயல்நீளம் குரலையிட்டுக் கொண்டு ஓடித் திரிந்தான். அவன்முன் எதிர்ப்பட்டவர்கள் அஞ்சிப் பயந்து அப்பால் விலகிப்போவார்கள். விதவையான அவன் தாய் ஆருத்துயருற்று அழுதுகொண்டிருந்தாள்.

ஒருநாள் இந்தநிர்ப்பாக்கிய இளைஞனைப் பிசாசு ஆட்டியலைத்துத் துன்புறுத்திக் கொண்டிருந்தபோது, அவ்வழியாக ஒரு கிறிஸ்தவன் வந்தான். அவன் சூழநின்றவர்களை அப்பால் விலகும்படி சொல்லித் தனதுகழுத்தில் அணிந்திருந்த அற்புத வரவணிக்கத்தைக் கழற்றிக் கையிலெடுத்துக் கொண்டு பிசாசு பிடித்திருந்தவனை அணுகிச் சென்று, வரவணிக்கத்தைக் காட்டி, மாதாவின் நாமத்தினாலே அவனை விட்டு அகன்று போகும்படி பிசாசுக்குக் கற்பித்தான். என்ன அற்புதம்! இதைக்கேட்டதே பிசாசு அவனைவிட்டு ஓடிப்போக, வரவணிக்கம் இன்னதென்று அறியாத அவ்விளைஞன் நிலத்திலே குப்புறவிழ்ந்து அதை வணங்கினான்.

அதன்மேல் அமைதியாயிருந்த அவனை எழுந்திருக்கச் செய்து, விதவையான அவன்தாயிடம் அவனைக் கொண்டு

போய் ஒப்படைத்தான். அவனுக்கு வரவணிக்கம் ஒருகாந்தம்போல் இருந்தது. அதை விட்டுப்பிரிய அவன் மனங்கொள்ளவில்லை. பின்னர் தனது அன்னையை நோக்கி, "தாயே அழவேண்டாம்; இந்த வரவணிக்கத்தைக்கண்டே பிசாசு மாயமாக ஓடி மறைந்துவிட்டது; நான் குணமடைந்துவிட்டேன்" என்று சொல்லி அவளைத் தேற்றினன்.

---

## காணுமல் போனதைக் கண்டடைந்தது

எனது மகள் தனது கணவன், பிள்ளைகளோடு ஒருநாள் என்னைச்சந்திக்க வந்தாள். பலபெட்டிகள், பைகள், பொட்டணிகளோடு ஒருவாடகைக்காரிலே இரவு 7-30 மணியளவில் வந்திறங்கினுள். கார்போய் ஒருமணிநேரத்தின் பின்னரே அதிலிருந்த பைஒன்றைஎடுக்க மறந்துவிட்டதை அறிந்து எல்லோரும் திகைத்தார்கள். அந்தப்பையினுள் வீட்டுக் கதவுகள், அலுமாரிகளின் திறப்புகள், செலவுக்கானபணம், நகைகள், மற்றும்சில பாடப்புத்தகங்கள் இருந்தன. எல்லாமாக 1,500 ரூபாவுக்குமேல் பெறுமதியுள்ள பொருட்கள் இருந்தன.

கார் நாவலவீதியில் வாடகைக்கு அமர்த்தப்பட்டது; ஆகையால், அதன் இலக்கத்தையோ, சாரதியையோ அவதானிக்கவில்லை. அதனுல் பொருட்களைக் கண்டுபிடிக்க யாதுவழியும் இருக்கவில்லை. நான்உடனே அர்ச். அந்தோனியாருக்கு நேர்த்திவைத்தேன். அப்பொழுது என்னுடைய கள் மகவலையாதுமின்றி, "அப்பா, அவதிப்படவேண்டாம்; எனது பவுண்சங்கிலியில் மாதாவின் அற்புதவரவணிக்கம் இருக்கிறது; அதனுல் தேவஅன்னை எங்களுக்கு உதவி செய்வாள்" எனக்கூறினுள்.

என்னஅதிசயம்! மறுநாள் திங்கட்கிழமைகாலை 9-30 மணியளவில் அந்தவாடகைக்கார்சாரதி பையையும், பொருட்களையும் அந்தப்படியே கொண்டுவந்து ஒப்படைத்தான். மாதாவின்உதவி அற்புதவிதமாக எங்களுக்குக் கிடைத்தது.

சாரதி நுகேகொடையிலிருந்து கொட்டாஞ்சேனைக்குக் காரோடு தான்வந்த வாடகைதவிர வேறெந்த வெகுமதியும் ஏற்கமறுத்துவிட்டான். ஆயினும் அவனைப் பலவந்தமாகப் பத்துருபா ஏற்றுக்கொள்ளச்செய்தோம்.

---

# இருப்புக் கழுத்தன்

சீனுவிலே 1923-ம் ஆண்டு ஐப்பசிமாதம் 30-ந் திகதி இச்சம்பவம் நிகழ்ந்தது. கொள்ளைக்காரர்கூட்டம் ஒன்று மூன்றுமனிதரைப் பிடித்து, தாங்கள் கொள்ளையடிக்கவிருந்த பேகன் எனும் கிராமத்துக்குக் கூட்டிப்போனது. போக மறுத்தால் தங்கள் உயிருக்கே ஆபத்துநேரும் என்பதை உணர்ந்த அம்மூன்று மனிதரும் அவர்களோடுகூடச் சென்றார்கள். ஆயினும் அந்தக்கிராமத்தை அடைந்ததும் "கள்வர், கள்வர்" என்று அவர்கள் குரலையிட்டார்கள். இதைக்கேட்டதே கிராமமக்கள் ஒருங்கேதிரண்டு கட்டுக்காவல் பண்ணிக்கொண்டார்கள்.

கொள்ளைக்காரரை இவ்விதம் காட்டிக்கொடுத்த மூவருக்கும் உடனே தண்டனைகிடைத்தது. ஒருவன் உடனடியாகத்தானே சிரம் துண்டிக்கப்பட்டான். மற்றவன் கழுத்திலே வெட்டுண்டான். ஆயினும், ஒருகிறிஸ்தவனின் கையால் ஞானதீட்சை பெறுமட்டும் அவன் உயிரோடிருந்தான். மூன்றும் ஆளும் வாளாலே வெட்டுண்டபோதிலும் காயமடையவில்லை. அற்புதவரவணிக்கம் அவன்கழுத்தில் இருந்தபடியால் அவனது கவசக்கழுத்தில் மாத்திரமே வெட்டுவிழுந்தது.

இதைக் கண்ணுற்ற அந்தக்கசடர் அதிசயப்பட்ட போதிலும் குரோதம் நீங்காதவர்களாய் அவனையும், கிறிஸ்தவர்களின் மந்திரசக்தியையும் நிந்தாட்சணை செய்தார்கள். தாங்கள் தப்பிக்கொள்ளும்படியாய் அவனுக்குச் சில நாணயங்கள் கொடுத்தார்கள். "உன் கழுத்து என்ன இரும்பா?" என்று கேட்டுவிட்டு ஓடிப்போனார்கள். புதுமையாக உயிர் தப்பிக்கொண்ட இந்த மனிதன் அன்றுதொட்டு, "இரும்புக் கழுத்தன்" என்று அழைக்கப்படுகிறான்.

---

## அதிசயமான ஆரோக்கியம்

மரியாயின் மைந்தருள் 23 வயதுள்ள ஒருபெண்மணி பின்வரும் சம்பவத்தை எழுதியிருக்கின்றாள். மரப்பலகையாலான ஒருதளத்திலே நான் ஒருநாள் சறுக்கியபோது, சிராய்ஒன்று உள்ளங்காலில் ஏறிக்கொள்ளவே அதனை இழுத்தெடுக்க முடியாமல் போய்விட்டது. உடனே வைத்தியஉதவியைத் தேடியபோதிலும் புறங்காலிலே ஒருபுண் உண்டானது. 'எக்ஸ்றே' படம் பிடித்தும் அதில் யாதொன்றும் காணப்படவில்லை.

இரண்டு வருடகாலமாக என்னால் ஒருவேலையும் செய்ய முடியாமல் போய்விட்டது. வேலை செய்யாதிருந்தும் மிகவும் வேதனைப்பட்டுக் கொண்டிருந்தேன். இரண்டு மூன்றுதரம் சத்திரசிகிச்சை செய்வித்தும் பலன்காணவில்லை. நோ அதிகரித்தது. ஒருவிரணத்திலிருந்து சீழ்வடிந்த வண்ணம் இருந்தது. சரீரசுகமும் கெடுவதாயிற்று. நம்பிக்கையிழந்த வைத்தியர் ஒருவர் பெரியசத்திரவைத்தியம் ஒன்று செய்யத் திட்டமிட்டார்.

நானோ உலகில் எவரும் இனிமேல் சிகிச்சைசெய்ய மாட்டார்களென உணர்ந்து, பரலோக அன்னையிலே எனது நம்பிக்கை முழுவதும்வைத்து மன்றாடிவந்தேன். மருந்து கட்டும் ஒவ்வொரு முறையும் மாதாவின் அற்புதவரவணிக்கத்தை எனதுபாதத்தின்மேல் வைக்கும்படி என்னுடைய

தாயைக் கேட்டுக்கொண்டேன். இருவரும் மிகுந்தபக்தியுருக்கத்துடன் மன்ருடிவந்தோம். மூன்று ஆண்டுகளின்பின் சென்றபுரட்டாசியிலே எங்கள் நம்பிக்கைக்கு நல்லபலன் கிடைத்தது. ஒருநாள்காலில் கடுமையான நோ ஏற்பட்டபோது, எனதுதாய் என்னுடைய புறங்காலிலே, வரவணிக்கம் வைத்த அதேயிடத்தில் வரிஒன்று இருக்கக்கண்டாள். உடனேபஞ்சிஞல் அவ்விடத்திலே உறுத்தித்தடவ ஒன்றரை அங்குல நீளமான ஒருசிராயின் ஆர்ப்பு வெளிப்பட்டது. உள்ளங்காலிலே உள்ளே ஏறியது. புறங்காலாலே வெளியேறியது.

இதை அறியவந்த வைத்தியர் "இது ஒருபுதுமை" என்று சாற்றிஞர். அந்தப்பெரிய சத்திரவைத்தியம் அப்போது எனக்கு நடைபெற்றிருந்தால் இன்று நான் ஒரு நொண்டியாகி யிருப்பேன். அன்றுமுதல் யாதுகஷ்டமுமின்றியே எனது வேலைகளைச் செய்துவருகிறேன். பாடற்பூசை ஒன்றிஞல் எனது குடும்பத்தாரும், மரியாயின் மைந்தர்சபையாரும் ஒன்றுசேர்ந்து தேவனுக்கும், மரியன்னைக்கும் நன்றித்துதி கூறிஞேம்.

---

## அடைக்கலம்
## நம்பிக்கையின் பலன்

ஓர் இளம்பெண் தனக்கு 1953-ம் ஆண்டில்நேர்ந்த இச்சம்பவத்தைப் பின்வருமாறு வரைந்திருக்கிருள்.

பரிசுத்த கன்னிமரியன்னையின் வல்லமையையும், நன்மைத்தனத்தையும் வாழ்த்திப் புகழ்வது எனது பெரும் கடமையாய் இருக்கிறது. கடந்த புரட்டாசிமாதத்தில் எங்கள் மரியன்னை ஒரு பெரிய விபத்திலிருந்து என்னைக் காப்பாற்றிஞள், ஒரு ஸ்கூட்டரில் நான் பிரயாணஞ் செய்தபோது வாயுவேகமாக வந்த ஒரு மோட்டர்ரதம் எனது

வாகனத்தில் மோதி என்னை ஒரு குட்டிச்சுவரோடு எற்றி விட்டது. இதைக்கண்ட ஒருவர், "செத்த சவத்தைத்தான் தூக்கப் போகிறோமென்று எண்ணினேம்" என்றார். ஆனால், மாதாவின் அற்புத வரவணிக்கத்தை அணிந்திருந்தபடியால் நான் உயிர் பிழைத்தேன். முறிவுதறிவு இல்லாமல் சிறு காயங்களுடன் தப்பிக்கொண்டேன்.

நம்பிக்கை வைக்கிறவர்களுக்கு நிறைந்த உதவிகளைச் செய்வதாகத் தேவதாய் கத்தரின் கன்னியாஸ்திரிக்குச் சொன்னாள். இந்த வார்த்தைகளை விசுவசிப்போம்! அற்புத வரவணிக்க பக்தியைப் பரப்புவோம்! அதன்மூலம் என்னைப் போல் பிறரும் உதவியை அடையும் பாக்கியம் பெற்றிருந்தால் இன்னும் கூடிய ஆர்வத்துடன் அயராது உழைப்போம்! இவைதான் நன்றியைக் காட்டுவதற்குச் சிறந்த வழிகளாகும்.

---

## அதிசய மனந்திரும்புதல்

பரீஸ் நகரிலுள்ள வைத்தியசாலை ஒன்றிலே ஒருபோர் வீரன் ஆறுமாதகாலமாக வியாதியாய்க்கிடந்து இரத்தம் உமிழ்ந்து கொண்டிருந்தான். அவன் துர்நடத்தையாக நடந்து இருபதுவருடமட்டாய்ப் பிறருக்குப் பெரும் துன்மாதிரிகையாய் இருந்தவன். அவன் மரணத்தருவாயில் இருப்பதை அறிந்த தாதிக்கன்னியாஸ்திரி அவனை அந்திய வேளைக்குத் தயார்ப்படுத்த முயன்றாள். அவனோ, "நான் பிழையான ஆளல்ல, களவெடுக்கவுமில்லை, கொலைசெய்யவுமில்லை, பாவசங்கீர்த்தனஞ்செய்ய அவசியமுமில்லை" என்றான். கொலை, களவு செய்யாவிடினும் கடைசிவேளையிலே கடவுளின் இரக்கத்தைப்பெற இந்தத் தேவதிரவிய அநுமானம் அவசியம் தேவையென்று அவள் புத்திசொன்னபோது, "கன்னியாஸ்திரீ, கரைச்சல் படுத்தாது என்னை விட்டுவிடுங்கள்" என உளறினான். அபாயநிலை அண்மிய

தாலே குருவானவர் அழைக்கப்பட்டார். பாவியான போர் வீரனோ தன்மனச்சாட்சியை ஒழுங்குசெய்ய மறுத்து விட்டான்.

இந்தப்பரிதாப நிலையிலே அவன் தேவநீதாசனத்தின் முன் எவ்விதம் செல்லப்போகிருனென்று பயந்த கன்னியாஸ்திரி புத்திபோதனையால் சாதிக்கமுடியாததைச் செபத்தால் சாதிக்கமுனைந்தாள். இரகசியமாக ஓர்அற்புத வரவணிக்கத்தை அவன் படுத்திருந்த மெத்தையினிடையே சொருகிவிட்டு அவனது கடினமனதைத் திருப்பும்படி மாதாவைப்பார்த்து மன்ருடிக்கொண் டிருந்தாள். மறுநாட் காலை வியாதிக்காரன் அமைதியாயிருக்கக்கண்ட கன்னியாஸ்திரி அவனிடம் சென்று சேமம்விசாரித்தாள். "கன்னியாஸ்திரீ, நான் இன்று நல்ல நித்திரை செய்தேன், சுகமாயிருக்கிறது" என்ருன். அவள் அப்பாற்செல்ல ஆயத்தப் படுகையில் அவன் அவளை விழித்து, "நான் பாவசங்கீர்த்தனஞ்செய்ய நினைக்கிறேன்; தயவுசெய்து குருவானவரை அழைப்பியுங்கள்" என்ருன்.

பாவசங்கீர்த்தனம் செய்தபின் அவனுக்கு மெத்தைக்குள் இருந்த வரவணிக்கம் காண்பிக்கப்பட்டது. அதனைக் கண்ணுற்றதே அவன் பூச்சியமாக அதையெடுத்து முத்தமிட்டு, "இதுதான் என்னைக் காப்பாற்றியது; இதை என் கவசத்திலே, யுத்தசிலுவையருகிலே தைத்துவிடுங்கள்; என் விருதின்பக்கமாகத் தொங்கட்டும்; இதையிட்டு இனிமேல் நான் வெட்கப்படமாட்டேன்" என்று அமைதியாகக் கூறினுன். அதன்மேல் அவனுக்குத் தேவநற்கருணை கொடுக்கப்பட்டது. மறைந்த தேவஇரட்சகரை அவன் விசுவாசத்தோடும், உருக்கத்தோடும் மன்ருடித் தனது கடந்தகால பாவச் சீவியத்தையிட்டு மனம்நொந்து பொறுத்தலை இரந்து கொண்டான். பின்னர் மேலும் இரண்டு நாட்கள் உயிரோடிருந்து அவஸ்தைப்பூசுதல் பெற்று மனஸ்தாப, விசுவாசஉணர்ச்சிகளுடன் பாக்கியமான மரணமடைந்தான்.

# இது புதுமையல்லவா?

1963-ம் ஆண்டின் ஆடிமாதத்தில் எனக்கு ஏற்பட்ட ஒரு விபத்தைப்பற்றிய விபரத்தை அறியத்தருகிறேன்.

நான் தெகிவலையிலிருந்து கோட்டையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தேன். எச்சரிக்கையின் அடையாளம் ஏதுமின்றி வீதியிலே ராக்ஸியொன்று திடீரெனக் குறுக்கே வந்தது. நான் ஒருமோட்டர் சைக்கிளில் விரைவாகச் சென்றதாலே விபத்தைத் தவிர்க்க வசதியேற்படவில்லை. ராக்ஸியுடன்மோதியதால் சுழன்றுகொண்டு இருவண்டிகளுக்குமிடையே விழுந்தேன். கை, கால் முறிந்திருக்குமென்று நினைத்தேன். ஆனால், எழுந்துநின்றபோது ஒருசிறுகாயந்தானும் இல்லாததுகண்டு அதிசயித்தேன். சைக்கிளின் முன் பக்கம்மட்டும் சப்பையாய்ப் போய்விட்டது.

பின்புறமாகக் காரில்வந்த ஒருவர் தரித்துநின்று என்னிடம் கூறினர். "உனக்கு நல்லகாலம்; புதுமையாக உயிர்தப்பிவிட்டாய்; நீவிழுந்ததும் முடிந்துபோயிருப்பாயென்றே நினைத்தேன்" என்று கூறிப் போயினர்.

பொலிஸார்வந்து வீதியில் ஆளில்லாததுகண்டு காயப்பட்டவரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பியாயிற்றுவென்று வினவினர். நானே மோட்டர்சைக்கிளில் ஓடிவந்த ஆளென்று சொன்னபோது நம்ப மறுத்தனர். ராக்ஸியின்சாரதி உறுதியாகக் கூறியபின்னரே என்முறையீட்டை எழுதச் சம்மதித்தனர்.

நான் அற்புதவரவணிக்கத்தைச் சிறுவயதிலிருந்தே கழுத்தில் அணிந்திருக்கிறேன். அதன்மூலம் மாசில்லாதமாதா என்னைப் புதுமையாகக் காப்பாற்றினளென்றே நிச்சயமாகச் சொல்லுகிறேன். அவளுடைய பாதுகாப்பு இல்லாவிடின் இந்தப்பயங்கர விபத்திலே நான்கட்டாயமாக மடிந்திருப்பேன்.

## மகமதிய மந்திரி காப்பாற்றப்பட்டார்

1959-ம் ஆண்டிலே லெபனன் நாட்டில் நிகழ்ந்த உள்நாட்டுக் கலகத்தின்போது மக்களின் உயிருக்கு ஆபத்துகள் அதிகமாயிருந்தன. ஒருநாள் சாமிசோல் எனும் லெபானிய பிரதமர் தனதுகோடைகால வாசஸ்தலத்திலிருந்து பெய்ரூத் நகருக்குச் சென்றார். வழியிலே ஒருகிறிஸ்தவகிழவி அவரை வழிமறித்து, அவரிடம் ஓர் அற்புத வரவணிக்கத்தைக் கொடுத்து, "மாதாவின் இந்தச்சின்னம் உமக்குக்காவலாய் இருக்கும்" என்று சொன்னாள்.

என்ன அதிசயம்! அவ்விதம் சொல்லிமுடிந்ததும் சிலயார் தூரத்துக்குமுன்னே சமயம்பார்த்து வெடிக்கும்குண்டு ஒன்று வெடித்து, முன்னே இருமோட்டர் சைக்கிள்களில் சென்ற இருபோர்வீரரைக் கொன்றது. தாமதியாமல் பிரதமர் சென்றிருந்தால் நிச்சயமாக அவர் உயிர் இழந்திருப்பார். வரவணிக்கமாதாவின் வல்லமையாலேயே தான் காப்பாற்றப்பட்டதாக அவர் நன்றியறிதலோடு தெரிவித்தார்.

---

## அற்புத வரவணிக்கமும் குத்துவாளும்

துருக்கியிலே இஸ்மீர்பட்டினத்தில் வசித்த ஒருகத்தோலிக்கமாது ஒருநாள் தனதுமகனைப்பற்றிப் பெரும் அச்சமும், அங்கலாய்ப்பும் கொண்டாள். ஆகவே, அன்றுஞாயிற்றுக்கிழமைகாலை அவள் அற்புதவரவணிக்கம் ஒன்றைத் தனது கழுத்தில் அணிந்துகொண்டு போகும்படி அவனை வேண்டினாள். அவனும் மரியாதைக்காக அப்படியே செய்தான்.

அன்றிரவு அவன் பட்டினத்தில் தனிமையான ஒரு பாதையால் வரும்போது ஒருகள்வன் அவனை வழிமறித்துப்

பணம்கேட்டான். அவன்மறுக்கவே கள்வன் தனது குத்து வாளை இழுத்தெடுத்து அவன்மார்பில் குத்தினன். குத்துண்டு காயமடைந்தவனின் குரல்கேட்டுச் சமீபத்தில் நின்ற பொலிஸ்காரன்ஒருவன் வரவே, கள்வன் அதைக்கண்டு ஓட்டம்பிடித்தான். நெஞ்சிலிருந்து ஓடிய இரத்தத்தைப் பொலிஸ்காரன் துடைத்துவிட்டு அவனை அவன்வீட்டுக்கு அழைத்துச்சென்றான்.

அங்கு உடையைக்களைந்து பார்த்தபொழுது வரவணிக்கத்தைக் குத்துவாளின்முனை துளைத்திருக்கக் கண்டார்கள்.

வரவணிக்கத்தை அது துளைத்திராவிடில் அந்தக்குத்து அவன் இருதயத்தை ஊடுருவ, அதனல் அவன் இறந்திருப்பானென்று வைத்தியர் சாட்சிபகர்ந்தார்.

அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம். 96-64




விலை சதம் -/50

ஆசீர்வதிக்கப்பெற்ற புதுமைப் பதக்கமும்
இப்புத்தகத்துடன் கொடுக்கப்படும்.